வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 20.08.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 233 பக்கங்கள் : 12




## ஜனாதிபதித் தேர்தல்:

# கண்காணிப்பு பிரதிநிதியை நியமித்தது ஐரோ. ஒன்றியம்!

கொழும்பு, ஓகஸ்ட் 20



**செப்.21ஆம் திகதி நாட்டில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை கண்காணிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதியாக நாச்சோ சான்செஸ் அமோர் நியமிக்கப்பட்டுள்ளார்.**

தேர்தல்கள் ஆணைக்குழுவின் அழைப்பை ஏற்றே ஐரோப்பிய பாரா ளுமன்ற உறுப்பினரான சான்செஸ் அமோர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சான்செஸ் அமோர் ஸ்பெயினை சேர்ந்தவர். 2019ஆம் ஆண்டு மொசம் பிக்கில் நடந்த பொதுத் தேர்தலையும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் இவரே கண்காணித்திருந்தார்.

கடந்த காலங்களில் நடந்த நாட்டின் 6 தேர்தல்களில் ஐரோப்பிய ஒன்றியம் தேர்தல் கண்காணிப்பு பணியில் ஈடு பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## உயிர்த்த ஞாயிறு தாக்குதலை விசாரிக்க சுயாதீன ஆணைக்குழு!

### இணங்கினாராம் நாமல்

கொழும்பு, ஒக. 20

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் உள்ள வர்கள் தொடர்பில் விசாரிப்பதற்கு சுயாதீன நீதி ஆணைக் குழுவை அமைப்பதற்கு நாமல் ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான நாமல் ராஜபக்ஷ நேற்று

11

## கொக்குத்தொடுவாய் புதைகுழி இன்று கவனவீர்ப்பு போராட்டம்!


முல்லைத்தீவு, ஒக. 20

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி முன்பாக இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கவன வீர்ப்பு போராட்டம் நடைபெறவுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் முல்லைத்தீவு மாவட்ட சங்கத்தின் அழைப்பின் பேரில் இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

கொக்குத்தொடுவாய் புதைகுழி

11



## புலிகள் தாக்கியபோது பயணித்த காருடன் பொன்சேகா பிரசாரம்!

கொழும்பு, ஒக. 20

புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான காருடன் தனது முதல் பிரசாரக் கூட்டத்தை நடத்தியுள்ளார் ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகா.

செப். 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனா திபதித் தேர்தலில் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவும்

11

## ஹரீன், மனுஷ ஜனாதிபதியின் ஆலோசகர்களாக நியமனம்!

கொழும்பு, ஒக. 20

முன்னாள் அமைச்சர்களான ஹரீன் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோரை தனது ஆலோசகர்க ளாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார்.

அரசமைப்பின் 41(1) பிரிவின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் இந்த நிய மனங்கள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப் பட்டது.

11

## நாமலுக்காக நாடு முழுவதும் நான் பரப்புரை செய்வேன்!

### மகிந்த ராஜபக்ஷ

கொழும்பு, ஒக. 20

ஜனாதிபதித் வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் வெற்றிக்காக நாடு முழுவதும் தேர்தல் பிரசாரங்களை நடத்துவேன். எம்மிதான மக்கள் நம்பிக்கை இன் றும் உறுதியாக உள்ளது. நிச்சயம் வெற்றி பெறு வோம் - இவ்வாறு கூறியுள்ளார் மகிந்த

11

## ஜனாதிபதி ரணிலுக்கு எதிராக பவ்ரல் அமைப்பு முறைப்பாடு!

கொழும்பு, ஒக. 20

தற்போதைய அரசாங்கம் தேர்தல் சட்டத்தை வேண்டு மென்றே மீறி வருகிறது என்று பவ்ரல் அமைப்பு சாடியுள்ளது. அத்துடன், ஜனாதிபதியின் ஆலோசகர் கள் இருவரின் நியமனங்கள் தொடர்பாகவும் கவலை தெரிவித்து தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அந்த அமைப்பு முறைப்பாடு செய்துள்ளது.

11

## அதிகாரத்தை எம்மிடம் தருமாறு கோரியும் கோட்டாபய தரவில்லை!

### நாம் தப்பி ஓடவில்லை என்கிறார் அநுர

கொழும்பு, ஒக. 20

அரசாங்கத்தைப் பொறுப்பேற்குமாறு ராஜபக்ஷக்கள் எங்க ளுக்கு அழைப்பு விடுக்க வில்லை. ஆனால், நெருக் கடிக்குத் தீர்வு காண நாம் தயார். அதிகாரத் தைத் தாருங்கள் என்று ஜனாதிபதி கோட்டாபய வுக்கு கடிதம் அனுப்பி னோம். அந்த கடிதம் கிடைத்தது என்றுகூட எங்களுக்கு பதில் வர வில்லை - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பதிலளித்துள்ளார்

11

## ரணிலுக்கு ஆதரவளிப்போர் புதிய அரசியல் கூட்டணி!

### பேச்சு ஆரம்பம் என்கிறார் பிரதமர்

கொழும்பு, ஒக. 20


ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவாளிக் கும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் எம். பிக்கள் மற்றும் ஏனைய கட்சிகள் இணைந்து புதிய அரசியல் கூட்டணியை அமைப்பது தொடர்பில் பேசி வருகின் றன என்று பிரதமர் தினேஷ் குணவர்த் தன தெரிவித்துள்ளார்.

இந்த அரசியல் சக்தியை கட்டி யெழுப்புவதற்கு பிரதமர் என்ற

11

## இலங்கையரும் பயணித்த படகு சிசிலித்தீவு அருகே மூழ்கியது!

### 7 பேர் மாயம் 15 பேர் மீட்பு!



ரோம், ஒக. 20

இலங்கையர்கள் உட்பட 22 பேரு டன் பயணித்த 160 அடி நீளமான சொகுசு படகு சிசிலி தீவு அருகே கடலில் மூழ்கியது. இதில், ஏழு பேரைக் காணவில்லை என்று இத்தாலி ஊடகங்கள் தெரிவித்தன.

நேற்று திங்கட்கிழமை அதி காலை 5 மணியளவில் வீசிய சூறா வளியில் அகப்பட்டே படகு கடலில் மூழ்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. சிசிலியில் பலேர்மோ அருகே சூறா வளி தாக்கியதிலேயே படகு மூழ்கி யதாகத் தெரிய வந்தது.

இந்தப் படகில் இலங்கையர்கள் தவிர, நியூசிலாந்து, அயர்லாந்து நாட்டவர்களும் பிரிட்டன், பிரான்ஸ் நாடுகளை சேர்ந்த

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் நடக்கிறது

அண்மையில், கொழும்பில் சில அரசியல் பிரமுகர்களுடன் பேசிக் கொண்டிருந்தோம். அவர்களில், நல்லாட்சி அரசாங்கம் அமைவதற்கு முன்னதாக ராஜபக்ஷக்களுக்கு எதிராக பொது வேட்பாளர் ஒருவரைக் களம் இறக்குவதற்காக அயராது உழைத்தவர்கள் சிலரும் இருந்தனர். அவர்களில், ஒருவர் அப்போது நடந்த சம்பவம் ஒன்றை ஞாபகப்படுத்தினார்.

அவ்வாறு ராஜபக்ஷக்களுக்கு எதிராகப் பலமான பொதுவேட்பாளர் ஒருவரைக் களம் இறக்குவதற்காக தீவிரமாக பணியாற்றியவர் மாதுளவேவ சோபித தேரர் என்பது நமக்கு தெரிந்ததுதான்.

அந்தக் காலத்தில் மாதுளவேவ சோபித தேரர் தலைமையில் ஒரு கூட்டம் நடந்து கொண்டிருந்தது. கூட்டத்தில் முக்கிய கட்சிகள் அனைத்தினதும் தலைவர்கள் இருந்தனர். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தானே அந்தத் தேர்தலில் பொது வேட்பாளராக களம் இறங்க வேண்டும் என்பதில் பிடிவாதமாக இருந்தார். "ஏற்கனவே இரண்டாயிரத்து பத்து தேர்தலில் பலரின் வேண்டுகோளின் பேரில் நான் விட்டுக்கொடுத்து சரத் பொன்சேகாவை வேட்பாளராக்க சம்மதித்தேன். ஆனால், அவரால் வெற்றிபெறமுடியவில்லை. இந்தத் தடவை என்னால் வெற்றிபெறமுடியும்" என்று ரணில் விடாப்பிடியாக நின்றார்.

அங்கே இருந்தவர்கள் எல்லோரும், ரணில் சரியான தெரிவு அல்ல என்று எவ்வளவு சொல்லியும் அவர் கேட்பதாக இல்லை. கடைசியில் அந்தக் கூட்டத்தில் நேரடியாக கலந்துகொள்ளாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் கருத்தை அறிவது என்று தீர்மானிக்கப்பட்டு அவருக்கு தொலைபேசி அழைப்பு எடுக்கப்பட்டது. தொலைபேசியில் முதலில் அங்கே என்ன நடக்கின்றது என்பதைப் பற்றி விளக்கமளித்த பின்னர் அவரின் கருத்து கேட்கப்பட்டது. தொலைபேசி இப்போது அவர் பேசுவதை அனைவரும் கேட்கும் வகையில் "ஸ்பீக்கர் போன்" போடப்பட்டிருப்பது பற்றியும் சம்பந்தனுக்கு சொல்லப்பட்டது. தான் சொல்வதை ரணிலும் கேட்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டே சம்பந்தன் பதிலளித்தார்.

"மிஸ்டர் விக்கிரமசிங்க..." என்று ஆங்கிலத்தில் தொடங்கிய சம்பந்தன் சொன்னார்:

"எங்களுக்கு கிடைக்கின்ற தகவல்கள் நீங்கள் போட்டியிட்டால் வெற்றிபெற முடியாது என்றே தெரிவிக்கின்றன. இந்தத் தடவையும் நாங்கள் தோல்வி அடைகின்ற வேட்பாளருடன் நிற்க முடியாது. நீங்கள்தான் கேட்பீர்கள் என்றால், நாங்கள் வேறு தெரிவை நாடவேண்டியிருக்கும்".

சம்பந்தனின் அந்தத் தொடர்பு துண்டிக்கப்பட்டதும், ரணில் "சரி நீங்களே பொருத்தமான வேட்பாளரை கண்டு பிடியுங்கள்" என்று அன்றைய கூட்டத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தாராம்.

இந்தச் சம்பவத்தை அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட பிரமுகர் ஒருவர் சொன்னபோது, அவர்களிடையே இருந்த ஒரேயொரு தமிழரான இந்த ஊர்க்குருவிக்கு சற்று பெருமையாகவே இருந்தது.

இந்தச் சம்பவம்தான் அந்தச் செய்தியை படித்தபோது ஞாபகத்துக்கு வந்தது. தமிழ் அரசு கட்சியின் மத்திய செயல்குழு நேற்றுமுன்தினம்கூடி, பல விடயங்கள் குறித்தும் ஆராய்ந்திருந்தது. அதில் ஒன்று, கட்சியின் வழக்கு சம்பந்தமானது. வழக்கை எதிர்கொண்ட பின்னர் இதுவரை கட்சியின் இந்த மத்திய குழு பல தடவைகள் கூடிக்கலைந்திருக்கின்றது. ஒவ்வொரு தடவையும் அவர்கள் ஒவ்வொரு முடிவை இந்த வழக்கு சம்பந்தமாக எடுத்துக் கொண்டிருக்கின்றனரோ என்று கேட்காமல் இருக்கமுடியவில்லை. கடைசியாகக் கட்சி யாப்பின்படி தொகுதிக் கிளைகளிலிருந்து தெரிவு செய்யப்படும் பொதுச் சபையின் மூலம் புதிய தலைவர், செயலாளர், நிர்வாகிகளைத் தெரிவுசெய்வதென்று கடைசிக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. கட்சியின் யாப்பின்படி மூலக்கிளைகளிலிருந்துதான் தொகுதிக்கிளைக்கு பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படவேண்டும். அப்படியெனில், மூலக்கிளைகளிலிருந்தே தெரிவுகள் தொடங்கவேண்டும் என்கின்றனர் ஒரு தரப்பினர். மற்றைய தரப்பினரோ, அப்படியில்லாமல் தொகுதிக் கிளைகளிலிருந்து தொடங்குவோம் என்கின்றனர். இந்தச் சமாச்சாரம் முடிவுக்கு வரும்போலத் தெரியவில்லை. சிலவேளை தொகுதிக்கிளைக்கு புதியவர்கள் தெரிவு செய்யப்படும் போது, அந்தத் தெரிவும் பிழையானது என்று தொகுதிக்கு ஒருவர் நீதிமன்றம் போவார்களோ தெரியவில்லை.

அடுத்து முக்கியமாக நாம் சொல்ல வந்தது. ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பதில் தமிழ் அரசு நேற்று முன்தினம் எடுத்துள்ள முடிவு பற்றியது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களின் தேர்தல் அறிக்கைகளை வெளியிட்ட பின்னர் மத்திய குழு கூடி ஆராய்ந்து யாருக்கு ஆதரவளிப்பதென முடிவு எடுப்பது என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சி தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே, இதற்கு முன்னர் நடந்த மத்திய குழுக்கூட்டத்தில் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி தீர்வை தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளியிடுகின்றவர்களை ஆதரிப்பது என்று முடிவெடுக்கப்பட்டதாக சொல்லப்பட்டது.

ஆனால், இந்தக் கூட்டத்தில் அது பற்றி விளக்கமாக சொல்லப்படாவிட்டாலும் தேர்தல் அறிக்கைகளை ஆராய்ந்து முடிவெடுப்பது எனில் முதலாவது கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு இன்னமும் அப்படியே இருக்கின்றது என்றே நம்புவோம்.

ஆனால், நேற்றுமுன்தினம் கூட்டம் நடப்பதற்கு முன்னதாகவே கட்சியின் பேச்சாளரான, சுமந்திரன் எம். பி., "கடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் தேர்தலுக்கு அண்மித்த காலத்தில்தான் எமது நிலைப்பாட்டை அறிவித்தோம். இந்த தடவை அது ஒரு வித்தியாசமாக வரவேண்டும் என்ற எந்த தேவையும் கிடையாது" என்று தெரிவித்திருந்தார்.

அதாவது, கடந்த தேர்தல்களில் எல்லாம் எப்படி முடிவெடுத்தோமோ அதேபோலத்தான் இந்தத் தேர்தலிலும் முடிவெடுப்போம் என்கின்றாரோ தெரியவில்லை.

ஆனால், நேற்றுமுன்தினம் கூட்டம் முடிந்ததும் வேட்பாளர்களின் அறிக்கை வெளிவரும்வரை தென்னிலங்கையின் பிரதான கட்சிகளின் பேச்சாளர்களுடன் பேச்சுகளை முன்னெடுப்பது என்றும் முடிவு எட்டப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப்போதுதான் மேலேயுள்ள சம்பந்தனின் கதை ஞாபகத்துக்கு வந்தது. அத்தனை ஆளுமையுடன் இருந்த சம்பந்தன் பேச்சு நடத்தியே ஒவ்வொரு பொங்கலுக்கும் தீபாவளிக்கும் காத்திருக்கவேண்டியிருந்தது.

இந்நிலையில், வேட்பாளர்கள் எவருமே இவர்களைக் கண்டுகொள்ளாமலே போய்க்கொண்டிருக்கின்றபோது இவர்கள் பேசப் போகின்றார்களாம். பொறுத்திருந்துவிட்டோம். இன்னும் கொஞ்சம் பொறுத்துத்தான் பார்ப்போமே.

- ஊர்க்குருவி.

# நல்லூர் பெருந்திருவிழாவில் இன்று!

யாழ்ப்பாணம், ஓக. 20

நல்லூர் பெருந்திருவிழா நாட்களில் சிறீலசிறீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5.30 மணி வரை கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று வருகின்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இன்று செவ்வாய்க்கிழமை இணுவில் பரராஜசேகர பிள்ளையார் பஜனை குழுவினரின் பஜனை நிகழ்வு நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார்.

(ஐ)

• • •

யாழ்ப்பாணம், ஓக. 20

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சிறப்பு நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடத்தப்படும் இந்த நிகழ்வில் இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறீலசிறீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க நிகழ்வு ஆரம்பமாகும்.

வேதாந்தமடம் சிறீ சிவகுருநாத குருபீடம் எட்டாவது குருபீடாதிபதி சிறீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், வடக்கு மாகாணசபை பிரதம செயலாளர் இலட்சுமணன் இளங்கோவன் பிரதம அதிதியாகவும் யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீட இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சி. ரமணராஜா சிறப்பு அதிதியாகவும் பங்கேற்பர்.

இதில், புற்றளை சித்தி விநாயகர் அறநெறி பாடசாலை, தும்பளை நெல்லண்டை அறநெறி பாடசாலை, பசுபதீஸ்வரர் ஆலய கலைப் பயிற்சி நிலைய அறநெறி பாடசாலை, மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விசேட நிகழ்வாக கீதவாஹினி இசைக்கல்லூரி வழங்கும் குழு இசை என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருத்தனன் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# ரணிலுடன் சென்றோரை நினைத்து சிரிக்கிறேன்!

## கூறுகின்றார் மகிந்த



கொழும்பு, ஓக. 20

தன்னைக் கைவிட்டு ஜனாதிபதி ரணிலின் கரங்களை பலப்படுத்த சென்றவர்களை எண்ணி, சிரிப்பதைத் தவிர வேறு எதுவும் சொல்ல முடியாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எந்தவொரு தேர்தலும் சவாலானது என தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி, நாமல் ராஜபக்ஷ வெற்றியீட்டுவார் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

உங்களைக் விட்டுச் சென்றவர்களை கட்சியில் மீண்டும் இணைத்துக்கொள்வீர்களா என்ற கேள்விக்கு மகிந்த ராஜபக்ச சிரித்துக் கொண்டே பதிலளித்தார்.

"என்னிடம் ஒரு சலூன் கதவு உள்ளது. நீங்கள் செல்லலாம். நீங்கள் வரலாம். எப்போது வேண்டுமானாலும் செல்லலாம். எப்போது வேண்டுமானாலும் திரும்பி வரலாம்" என அவர் குறிப்பிட்டார்.

(அ)

# வெடிக்காத துப்பாக்கி தோட்டா ஐந்து நட்சத்திர விடுதியில் மீட்பு!

கொழும்பு, ஓக. 20

கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர விடுதியொன்றின் பிரதான நுழை வாயிலுக்கு அருகில் வெடிக்காத நிலையில் காணப்பட்ட துப்பாக்கி தோட்டா ஒன்று கண்டெடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கோட்டை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கைத்துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் தோட்டா ஒன்றே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நட்சத்திர விடுதியின் வளாகத்தைச் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர் ஒருவரால் குறித்த தோட்டா கண்டெடுக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

(அ)

# சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிப்பு



கொழும்பு, ஓக. 20

நவமங்கை நிவாச இயக்குநரும் சமூகசேவகியுமான சுவர்ணா நவரத்தினம், சமூக சேவையாளரும் மருத்துவருமான கணேசவேல் ஆகியோருக்கு சர்வதேச சிறந்த சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

ஐக்கிய இயற்கை சர்வதேச அமைப்பு அதன் தேசிய 4ஆவது மாநாடு யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் 26 நாடுகளை சேர்ந்தவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. இவர்களுக்கான விருதுகளை கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ. அரவிந்தகுமார் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு வழங்கி வைத்தார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
20.08.2024 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம், ஆவணி 04

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் பொது வேட்பாளர் யாருக்காக?

"இந்தியா விரும்பும் ஒருவரை ஆட்சியில் அமர்த்த தமிழ்த் தலைமைகள் வேலை செய்கின்றன", என்று அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (முன்னணி) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டிருக்கின்றார். காங்கிரஸ் கட்சி இவ்வாறு பேசுவது புதிதல்ல. இது. ஒருவகையான "கட்சி நோயா"கவே தொடர்கின்றது. ஆனால், இவ்வாறான கதைகள் மீண்டும் மீண்டும் மக்கள் மத்தியில் சொல்லப்படும்போது அது எதிர்மறையான சிந்தனையை ஏற்படுத்துவதற்கு - முற்றிலுமாக இல்லாவிட்டாலும்கூட பகுதியளவிலாவது பங்களிக்கும். உண்மையில், இந்தியா யாரை விரும்புகின்றது? அது யாருக்குத் தெரியும்? இந்தக் கேள்விக்குப் பதிலாக ஊகங்களை வெளியிடலாம். ஆனால், முடிந்த முடிவாக எதனையும் குறிப்பிட முடியாது.

தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாடு தொடர்பில் உரையாடப்பட்ட காலத்திலிருந்து அதன்மீது சந்தேகங்களும் கேள்விகளும் முன்வைக்கப்பட்டன. இவ்வாறான கேள்விகளை முன்வைத்தவர்கள் எவருமே தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஏன் எதிர்க்க வேண்டும் என்பதற்குத் தெளிவான - உறுதியான பதிலை எவருமே முன்வைக்கவில்லை - இன்றுவரையில் முன்வைக்க முடியவில்லை. தமிழ் அரசுக் கட்சியின் ஓர் அணியினர் இந்த நிலைப்பாட்டைத் தோற்கடிக்கப் போவதாக சூளுரைக்கின்றனர். ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நோக்கி அதிக தமிழ் வாக்குகளை குவிப்பதால் தமிழ் மக்களுக்கு எவ்வாறான நட்டம் ஏற்பட்டுவிடப் போகின்றது?

உண்மையில், தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்க மறுப்பவர்கள் - அதிலும் அவரைத் தோற்கடிக்க வேண்டும் என்பவர்கள் அனைவருமே ஒரு தெளிவான நோக்கத்தின் அடிப்படையில்தான் இயங்குகின்றனர். அதாவது, தாங்கள் விரும்பும் ஒரு தென்னிலங்கை வேட்பாளரின் வெற்றியில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஆதரவு நிலை தாக்கத்தை ஏற்படுத்திவிட்டால் என்ன செய்வது? இந்த அடிப்படையில்தான் பொது வேட்பாளர் எதிர்க்கப்படுகின்றார் - அவரை நோக்கித் தமிழ் மக்கள் திரண்டுவிடக்கூடாது என்பதில் ஒரு குறிப்பிட்ட தமிழ் அரசியல் தரப்பினர் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர்.

அவ்வாறான எதிர்ப்பாளர்கள் ஆரம்பத்தில் தமிழ்ப் பொது வேட்பாளர் முயற்சி வெற்றிபெற முடியாத ஒரு விடயம் என்றே எண்ணினர். இதனை முன்னெடுப்பவர்கள் ஒரு கட்டத்தில் கைவிட்டுவிடுவர் என்றே எண்ணினர். ஒருவேளை முயற்சி தொடர்ந்தாலும்கூட, இவர்களால் வேட்பாளர் நிலைக்கு வர முடியாது - அப்படியே வந்தாலும்கூட வேட்புமனுவை தாக்கல் செய்யப் போவதில்லை என்றெல்லாம் கணக்குப் போட்டனர். ஆனால், அவை அனைத்தையும் தாண்டி இன்று தமிழ்ப் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டிருக்கின்றார்.


தமிழ்ப் பொது வேட்பாளர் அடிப்படையில் எவருக்கானவரும் அல்லர் - அவர் தமிழ் மக்களின் அடையாளம். தமிழ்த் தேசிய இனப் பிரச்னை தீர்க்கப்படவில்லை என்பதை சொல்வதுடன் - தமிழ் மக்கள் தங்களின் அரசியல் நிலைப்பாடுகளில் உறுதியாக இருக்கின்றனர் என்பதைச் சொல்வதுடன் - தொடர்ந்தும் தமிழ் மக்களை புத்திசாலித்தனமாக ஏமாற்றிவிடலாம் என்று எண்ணும் தென்னிலங்கை அணுகுமுறை தவறானது என்பதை சொல்வதற்குத்தான் தமிழ் மக்களுக்கு ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் தேவைப்படுகின்றார். எனவே, தமிழ்ப் பொது வேட்பாளர் என்பவர் தமிழ் மக்களுக்கானவரே தவிர, வேறு எவருக்குமானவரல்லர்.

ஆனால், இந்த உண்மையை மக்கள் புரிந்துகொள்ளக்கூடாது என்பதற்காகவே தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் பலவகையான புரளிகள் பரப்பப்படுகின்றன. இதனைத் மக்கள் புரிந்துகொள்ள மாட்டார்களா? - மக்கள் தொடர்ந்தும் போலிகளைக் கண்டு ஏமாந்து கொண்டிருப்பார்களா?

## நல்லூரான் திருவடி - 12

# அவுஸ்திரேலிய சிவதொண்டன் நிலையம்

**டாக்டர் கே. என். நவரட்ணம்**



அவுஸ்திரேலிய சிவதொண்டன் நிலைய மூலஸ்தானத்தில் சுவாமிகளின் நல்ல படமொன்று வைக்கவேண்டுமென்று ஆசைப்பட்டேன். யாழ்ப்பாணத்தில் சுவாமிகள் தியானத்தில் லயித்திருக்கும் படத்தை வைப்பதற்கு நான் முன்வந்தேன். அப்படத்தை பெரிதாக்க விரும்பினேன். படங்களைப் பெரிதாக்கி வடிவமைப்பவரிடம் கொண்டுசென்று கொடுத்தேன்.

அவுஸ்திரேலியாவில் நாம் சிவதொண்டன் நிலையத்தை அமைக்க முன்வந்ததன் முக்கிய காரணம் எமது பிள்ளைகள் நல்ல சூழலில் - எமது சைவ சமய விழுமியங்களைப் பேணவேண்டும் என்பதேயாகும். இந்நிலையில், யோகரின் படத்தைப் பெரிதாக்கி தரும்படி கொடுத்தவரிடம் சென்று படம் தயாரா என்று கேட்டேன். ஆனால், அந்தப் படத்தை பெரிதாக்க முடியாது என்று கூறவே யோகர் கட்டிலில் அமர்ந்திருக்கும் படத்தைக் கொடுத்து அதனை பெரிதாக்கிக் கொண்டேன். அப்படத்தையே நாம் தற்போது எமது நிலையத்தில் வைத்து வணங்கி வருகின்றோம்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவர் அவுஸ்திரேலியா வந்து பத்து வருடங்களுக்கும் மேலாக நிரந்தர தொழிலின்றி சிரமப்பட்டார். அவருக்கு அரசாங்கம் வழங்குகின்ற உதவிப்பணமே கிடைத்து வந்தது. இதுகுறித்து, அவரின் மனைவியார் என்னிடம் கூறியதோடு விரக்தியால் கிறிஸ்தவனாக மாறப்போவதாகவும் தம்மிடம் அவர் கூறிவருவதாக அப்பெண்மணி கூறினார்.

சமயம் மாறினால் தொழில் வருமா? என்று கேட்டுவிட்டு, சிவாயசுப்பிரமுனிய சுவாமிகள் ஆங்கிலத்தில் எழுதிய 'சிவனோடு நடனம்', 'கணேசரோடு காதல்' என்ற இரு நூல்களையும் அவரிடம் கொடுத்து, வாசிக்கச் சொன்னேன். அவற்றை வாசித்த பின்னர் தான் மனம் மாறிவிட்டதாகவும் சைவ சமயம் பற்றி விளங்கிக் கொண்டாரெனவும் கூறினார்.

அவரை, தொடர்ந்து திருவடிபூசை செய்யும்படி கேட்டுக்கொண்டேன். அவர் பூசைக்குத் தேவையான பொருட்களையெல்லாம் கொண்டு வந்து பூசை செய்தார். அதனையடுத்து அவருக்கு ஆச்சரியமளிக்கும் விதத்தில் 48 ஆயிரம் டொலர்கள் சம்பளத்தில் நிரந்தரமான வேலையும் கிடைத்தது.

பெண் சங்கீத கலைஞர் ஒருவரிடம் ஒவ்வொரு பூசையிலும் அவரைப் பாடும்படி கேட்டேன். அவர் ஒருமுறை வந்து, 'கூவு கிளியே...' என்ற பாட்டை உள்ளம் உருகப் பாடினார். பின்னர் சிவராத்திரிக்கு வருவதாகத் தெரிவித்தார். ஆனால், வரவில்லை. விசாரித்தபோது அவர் தொலைபேசியில் ஒரு தொழில் வாய்ப்பைப் பற்றிக் கேட்டுள்ளார். கேட்ட இடத்திலேயே அவரை வேலைக்கு வருமாறு கூறியுள்ளார்கள். அத்துடன், பயிற்சியோடு நல்ல வேலையும் அவருக்குக் கிடைத்தது.


இதேவேளை, எமது சிவதொண்டன் நிலையத்தை கூட்டித் துப்பரவு செய்ய ஒரு பெண்ணை நியமித்தோம். அவர் இலங்கைப் பறங்கியர் இனப் பெண்ணாவார். இரண்டு வாரங்கள் வேலை செய்தால் 30 டொலர்கள் கொடுப்போம். இரண்டு வாரங்கள்தான் வேலை செய்தார். பின்னர் தாம் வேலைக்கு வரப்போவதில்லை எனத்தெரிவித்தார். ஒரு கிழமைக்கு 750 டொலர்கள் சம்பளத்தில் வேலை கிடைத்ததாகச் சொன்னார். சிவதொண்டன் நிலையத்தை பராமரித்தமைக்காக அந்தப் பெண்ணுக்கும் யோகர் அருளியமை அதிசயமே.

மெல்பர்ன் நகரிலுள்ள எங்கள் வீட்டில் மாதந்தோறும் ஆயிலிய பூசையை நடத்தி வந்தோம். 1995ஆம் ஆண்டு மிக விமரிசையாக அந்தப் பூசையை நடத்தினோம். அப்போது, அப்பூசையில் ஓர் அவுஸ்திரேலியர் வந்து கலந்து கொண்டார். அவரிடம் நான் இலங்கையின் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவன் என்று கூறினேன். உடனே அவர் தனது கைப்பையைத் திறந்து ஒரு படத்தைக் காட்டி, இவரைத் தெரியுமா என்று கேட்டார். அது யோகருடைய படம். அச்சமயம், நான் எனது கழுத்தில் தொங்கிக்கொண்டிருந்த சுவாமிகளது திருவுருவத்துடன் கூடிய பதக்கத்தைப் பார்த்ததும் ஆச்சரியமடைந்தார்.

**தொகுப்பு: அனந்த பாலகிட்ணர்**

(நாளை தொடரும்)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓகஸ்ட் - 20 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம் - ஆவணி 04
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : பிரதமை




**மேடம்**
உறவினர்கள். நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள்.

**இடபம்**
மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். கேட்ட இடத்தில் உதவி கள் கிடைக்கும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். வியாபாரத்தில் எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும். பனிப்போர் வந்து நீங்கும்.

**கடகம்**
மனைவி வழியில் அனுகூலம் உண்டு. புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**சிம்மம்**
விஐபிகள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர், நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். தொட்டது துலங்கும் நாள்.

**கன்னி**
நட்பு வட்டம் விரியும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள்.

**துலாம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. எதிர்ப்புகள் அடங்கும். பழைய இனிய சம்பவங்கள் நினைவுக்கு வரும். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும்.

**விருட்சிகம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். அரசால் ஆதாயம் உண்டு சிலரின் தவறான செயல்களை நினைத்து வருந்துவீர்கள்.

**தனுசு**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பழைய பிரச்னைகள் தீரும். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். ஆடை ஆபரணம் சேரும்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சுக்கும் ஆளாவீர்கள். யாருக்கும் பணம் நகை வாங்கித் தருவதில் ஈடுபட வேண்டாம். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வாகனத்தை இயக்கும் போது அலைப்பேசியில் பேச வேண்டாம்.

**மீனம்**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். புதிய கோணத்தில் யோசித்து பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். சிறப்பான நாள்.

# ஆவணி சதுர்த்தி விழா கொண்டாட்டம் விநாயகர் சிலைகள் வைக்கக் கட்டுப்பாடு



சென்னை, ஓக. 20

ஆவணி சதுர்த்தி விழாவையொட்டி தமிழகம் முழுவதும் விநாயகர் சிலைகள் வைப்பதற்கு பொலிஸார் கடும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர். விநாயகர் சதுர்த்தி விழா செப்ரெம்பர் 7ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. விநாயகர் சதுர்த்தியையொட்டி பொது மக்கள், இந்து அமைப்பினர், வீடுகள் மற்றும் வீதிகளில் விநாயகர் சிலைகளை பிரதிஷ்டை செய்து வழிபடுவார்கள். இதையடுத்து அந்த சிலைகளை ஊர்வலமாக எடுத்துச் சென்று நீர்நிலைகளில் கரைப்பார்கள்.

இந்த ஆண்டு சென்னையில் மட்டும் இந்து முன்னணி சார்பில் 5,501 சிலைகள் பிரதிஷ்டை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்காக, இந்து அமைப்புகள் பொலிஸ்துறையினரிடம் அனுமதி கோரி வருகின்றனர். ஏற்கனவே அனுமதிக்கப்படாத புதிய இடங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் விநாயகர் சிலையை பிரதிஷ்டை செய்யவும், ஊர்வலம் செல்லவும் அனுமதி வழங்க வேண்டும் என பொலிஸ் துறையினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நிலையில், விநாயகர் சிலைகள் களிமண்ணால் செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். மாசுக்கட்டுப்பாட்டு சபை வகுத்துள்ள விதிமுறைகளின்படி, இரசாயன கலவை இல்லாத சிலைகளை மட்டுமே வைக்க வேண்டும். விநாயகர் சிலைகள் மேடையுடன் சேர்த்து 10 அடிக்கு மிகாமல் இருக்க வேண்டும். பிற மதஸ்தலங்கள், மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்களுக்கு அருகில் சிலைகளை வைக்கக் கூடாது. மதவெறி தூண்டும் வகையில், பிற மதத்தினரின் உணர்வுகளைப் பாதிக்கும் வகையில் முழக்கங்களை எழுப்புவதை எக்காரணம் கொண்டும் அனுமதிக்கக் கூடாது என்று பொலிஸாரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (எ)

# அம்மா மருந்தகம், முதல்வர் மருந்தகம் இரண்டுக்கும் எந்த தொடர்பும் இல்லை

## அமைச்சர் சுப்பிரமணியன் தெரிவிப்பு

சென்னை, ஓக. 20

முதல்வர் மருந்தகத்துக்கும், அம்மா மருந்தகத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என தமிழக சுகாதார அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார். சென்னை சைதாப்பேட்டை மருத்துவமனைக்கு மருத்துவ உபகரணங்களை வழங்கி வைத்த பின்னர் நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உலகம் முழுவதும் குரங்கம்மை பாதிப்பு இருப்பதாக சொல்லப்பட்டுள்ளது. தமிழகத்தில் குரங்கம்மை பாதிப்பு யாருக்கும் இல்லை. சென்னை, கோவை, மதுரை, திருச்சி உள்ளிட்ட சர்வதேச விமான நிலையங்களில் வெளிநாட்டிலிருந்து வருபவர்களை பரிசோதித்து வருகிறோம். தைப்பொங்கல் அன்று 1000 இடங்களில் முதல்வர் மருந்தகம் பயன்பாட்டுக்கு வரும்.

இந்தத் திட்டத்துக்கும், அம்மா மருந்தகம் என்ற பெயருக்கும் எந்த தொடர்பும் இல்லை - என்றார். (எ)

# "இந்தியாவே போற்றும் தலைவராக உயர்ந்தார் கலைஞர் கருணாநிதி"



சென்னை, ஓக. 20

ஒரு கட்சியின் தலைவராக, ஒரு மாநிலத்தின், நாட்டின் தலைவராக, எப்போதும் சிந்தித்து செயல்பட்டதால்தான் அகில இந்தியாவும் போற்றும் தலைவராக கருணாநிதி உயர்ந்து நிற்கிறார் என்று முதல்வர் மு. க. ஸ்டாலின் புகழாரம் சூட்டினார்.

மறைந்த முன்னாள் முதல்வர் மு. கருணாநிதியின் நூற்றாண்டு நினைவு நாணய வெளியீட்டு விழா சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. இந்த நாணயத்தை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் வெளியிட்டார்.

இந்த நிகழ்வில், சட்டப் பேரவையை அதிகார அமைப் பாக இல்லாமல் சமூகத்துக்கு நன்மை செய்யும் அமைப்பாகக் கருத வேண்டும் என்றார் தந்தை பெரியார். அப்படித்தான் நாங்கள் செயல்பட்டு வருகிறோம்.

இது எனது அரசல்ல, நமது அரசு. ஒரு கட்சியின் அரசல்ல, ஒரு இனத்தின் அரசு. திராவிடக் கருத்தியல் கொண்ட அரசு. இதனை என்னுள் ஏற்படுத்தியவர் கருணாநிதி. அந்த வகையில் கருணாநிதியே இயக்கிக் கொண்டிருக்கிறார். ஒரு மனித னின் வாழ்க்கை அவனது மர ணத்துக்குப் பிறகு கணக்கிடப்பட வேண்டும் என்று சொன்னவர் கருணாநிதி. இன்றைக்கு அவரது முகம் தாங்கிய நாணயத்தில் தமிழ் வெல்லும் என்ற சொல்லும் இடம் பெற்றுவிட்டது என்றால், இதுவும் அவரது சாதனைதான் - என்றார் ஸ்டாலின். (எ)

# "கூட்டணி குறித்து விஜய் முடிவு செய்ய வேண்டும்"

சென்னை, ஓக. 20

தேர்தல் கூட்டணி குறித்து தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய்தான் முடிவு செய்ய வேண்டும் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

நாம் தமிழர் கட்சியின் உட்கட்டமைப்பை மறுசீராய்வு செய்து, புதிய பொறுப்பாளர்களை தெரிவு செய்யும் வகையில் தென் சென்னை மாவட்ட கலந்தாய்வுக் கூட்டம் சென்னை திருவான்மியூரில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

… தருவதுதான் நாம் தமிழர் கட்சியின் கனவு. தரமான கல்வி, மருத்துவம், நீர் சேமிப்பு, வேளாண்மை குறித்தெல்லாம் எனக்கு பல கனவுகள் இருக்கின்றன. யாருடன் கூட்டணி சேர்ந்து இவற்றை நான் நிறைவேற்ற முடியும்? எனது கனவை நான் தான் நிறைவேற்ற வேண்டும்.

2026 சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு புதிய கட்சியை தொடங்கியுள்ள நடிகர் விஜய், அதற்கான பணிகளை செப்ரெம்பர் மாதத்தில் இருந்து ஆரம்பிக்கிறார். கூட்டணி தொடர்பாக தேர்தல் நேரத்தில்தான் முடிவு செய்யப்படும். தேர்தல் கூட்டணி குறித்த முடிவை விஜய்தான் எடுக்க வேண்டும் - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனப்பிரச்னை தீர்வு பற்றி அறிவிப்பு

## 22 ஆம் திகதி வெளியிட தீர்மானம்

கொழும்பு, ஓக. 20

**இனப்பிரச்னையை தீர்ப்பதற்கான தமது கட்சியின் அரசியல் பொறிமுறை என்ன என்பது தொடர்பான அறிவிப்பை எதிர்வரும் 22 ஆம் திகதி சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் கூட்டணி வெளியிடவுள்ளது என தெரியவருகின்றது.**

ஐக்கிய மக்கள் கூட்டணியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கியுள்ள சஜித் பிரேமதாஸவின் தேர்தல் விஞ்ஞாபனம் எதிர்வரும் 22 ஆம் திகதி கொழும்பில் வெளியிடப்பட்டுள்ளது.

தமது ஆட்சியின் கீழ் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள், பொருளாதார மீட்சி திட்டங்கள், வெளிவிவகாரக் கொள்கை என்பன உள்ளிட்ட விடயங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பட்டியிலிடப்படவுள்ளது. அத்துடன், தேசிய இனப்பிரச்னைக்கான அரசியல் தீர்வு திட்டம் பற்றிய உறுதிமொழியும் வழங்கப்படவுள்ளது.

மலையக தமிழ் மக்களுக்கான அரசியல், பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் தொடர்பான பிரச்னைகளுக்கான தீர்வுத் திட்டங்களும் சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்கப்படவுள்ளது. (அ)

# ஹரின் பெர்ணான்டோவுக்கு அமைச்சு ஆலோசகர் பதவி?

கொழும்பு, ஓக. 20

உயர்நீதிமன்றின் உத்தரவுக்கமைய, அமைச்சுப் பதவியிலிருந்து விலகிய ஹரின் பெர்ணான்டோவுக்கு அவர் பதவி வகித்த அமைச்சுகளில் ஆலோசகர் பதவி வழங்கப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் சட்ட கூட்டமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

குறித்த நியமனம் தொடர்பில், தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளதாக அந்த கூட்டமைப்பின் கொழும்பு மாவட்ட சட்ட செயலாளர் சட்டத்தரணி துசித்த குணசேகர தெரிவித்துள்ளார்.

வேட்புமனு தாக்கல் செய்த பின்னர், ஜனாதிபதி ஆலோசகர் பதவிக்கு ஹரின் பெர்ணான்டோ நியமிக்கப்பட்டுள்ளார். உயர்நீதிமன்றின் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில், மீண்டும் அவர் வகித்த அமைச்சுகளில் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளமை தேர்தல் சட்டத்தை மீறுவதாகும் என சட்டத்தரணி துசித்த குணசேகர குறிப்பிட்டுள்ளார். (அ)

# பாடசாலை மாணவருக்கு பாலியல் கல்வி அவசியம்

## வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ

கொழும்பு, ஓக. 20

அன்பு மற்றும் பாலியல் தொடர்பு ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாட்டை சரியாகப் புரிந்துகொள்வதில் பாடசாலை மாணவர்கள் காட்டும் அசமந்த போக்கே சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரிப்பிற்கான பிரதான காரணமாகும் என மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர்கள் சங்கக் கூட்டமைப்பின் தலைவர் வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் இவ்வாறான நிலைமைகளை இல்லாதொழிப்பதற்கு பாடசாலை மாணவர்களிடையே பாலியல் கல்வியை மேம்படுத்துவது அவசியமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அன்பு மற்றும் பாலியல் ரீதியான உறவு என்பவற்றின் வேறுபாடுகளை அறியாத பெண்கள் ஏமாற்றப்படுகின்றனர்.

சமூகத்தில் பெண் பிள்ளைகள் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என வெளிப்படையாக அறிந்தாலும் அதற்குச் சமனாக ஆண் பிள்ளைகளும் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இதனால் அவர்கள் மனநிலை பாதிக்கப்படுகின்றனர். அவர்கள் சில நேரங்களில் சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுகின்றனர். இதன்காரணமாக அவர்கள் போதைப்பொருள் உள்ளிட்ட பல மோசமான விளைவுகளை எதிர்கொள்வதாக மருத்துவ மற்றும் சிவில் உரிமைகளுக்கான வைத்தியர்கள் சங்க கூட்டமைப்பின் தலைவர் வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ தெரிவித்துள்ளார். (அ)

# வேட்பாளர்கள் 21 நாட்களுள் அறிக்கை தராவிட்டால் தேர்வு செய்யப்பட்டாலும் பதவியை இழக்க நேரிடும்!

கொழும்பு, ஓக. 20

அனைத்து ஜனாதிபதி வேட்பாளர்களும் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட 21 நாட்களுக்குள் தங்கள் தேர்தல் பிரசாரச் செலவுகள் குறித்த முழுமையான அறிக்கையை தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.

அவ்வாறு செய்யத் தவறினால் அவர்கள் ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டாலும் பதவியை இழக்க நேரிடும் என தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க குறிப்பிட்டார். (அ)

# இஞ்சி விலை வீழ்ச்சி!

கொழும்பு, ஓக. 20

இஞ்சியை இறக்குமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டமையினால் அதன் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக இஞ்சி பயிர்ச்செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் தாம் பாரிய நிதி நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

கடந்த காலங்களில் 3,000 ரூபாவாக காணப்பட்ட இஞ்சி ஒரு கிலோகிராம் தற்போது 1,000 ரூபாய் வரை வீழ்ச்சியடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இஞ்சி இறக்குமதிக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியமையே விலை வீழ்ச்சிக்கு காரணம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கொழும்பு - புத்தளம் வீதியில் போக்குவரத்து பெரும் பாதிப்பு

கொழும்பு, ஓக. 20

கொழும்பு - புத்தளம் வீதியில் மஹாவெவ நகருக்கு அருகில் வெள்ளம் சூழ்ந்துள்ளதால் போக்குவரத்து தடை ஏற்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

மஹாவெவ தனிவெல்ல தேவாலயத்திலிருந்து மஹாவெவ நகரம் வரையிலான பகுதிகளில் நீர் நிரம்பிக் காணப்படுகின்றது.

சில பகுதிகளில் மூன்று அடிக்கு மேல் நீர் தேங்கியிருப்பதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குளியாபிட்டிய பிரதேசத்தில் தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக மஹாவெவ லுனு ஓயா மற்றும் ஹமில்டன் கால்வாயில் நீர் நிரம்பி வழிவதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் சூழ்ந்த பகுதிகளில் பயணங்களை மேற்கொள்வது மிகவும் ஆபத்தானது என மாதம்பே மற்றும் மாரவில பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# கடற்படையின் நிவாரணக் குழு பரகொடவுக்கு அனுப்பி வைப்பு

கொழும்பு, ஓக. 20

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால் களுத்துறை மாவட்டத்தின் பரகொட பகுதிக்கு நிவாரண நடவடிக்கைகளுக்கு குழுவொன்று அனுப்பப்பட்டுள்ளது.

அதன்படி, களுத்துறை மாவட்டத்தின் புளத்சிங்கள பிரதேசத்தில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதால் பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக வெள்ள நிவாரணக் குழு பரகொட பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நேற்று திங்கட்கிழமை பரகொடவில் வெள்ள நிவாரணப் பணிகளில் நிவாரணக் குழுவினர் ஈடுபட்டனர்.

மேலும், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான அவசர உதவி நடவடிக்கைகளை முன்னெடுக்க இலங்கை கடற்படையின் நிவாரண குழுக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. (அ)

# நாட்டில் உள்ள வர்த்தகர்களை பதிவு செய்யப் புதிய செயலி!

கொழும்பு, ஓக. 20

நாட்டில் உள்ள அனைத்து வர்த்தகர்களையும் பதிவு செய்வதற்காகத் தரவு கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான செயலி ஒன்று தயாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் விவகார அதிகாரசபை விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2003 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகாரசபை சட்டத்தின் 27ஆவது பிரிவுக்கமைய அனைத்து வர்த்தகர்களும் பதிவு செய்திருக்க வேண்டும்.

எனினும் கடந்த இரண்டு தசாப்தங்களாக இது உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை என நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

# தேசிய முக்கியத்துவம் கருதியே ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு!

## நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 20

ஜாதிக ஹெல உறுமயவின் தலைமை எந்த தீர்மானம் எடுத்தாலும் தேசிய தேவை கருதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க தீர்மானித்தேன். வெற்றி பெறுவது எந்தப் பக்கமாக இருந்தாலும் சரியான பக்கத்தையே நான் தெரிவு செய்தேன் என ஐக்கிய தேசிய கட்சியில் புதிதாக இணைந்து கொண்ட ஜாதிக ஹெல உறுமயவின் முன்னாள் பிரதித் தலைவர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறி கொத்தவில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியை துறந்த போது, ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் ஒரு ஆசனத்தை மாத்திரம் வைத்துக் கொண்டு, அந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டு, நாட்டை ஸ்திர நிலைக்கு கொண்டுவந்துள்ளார். இக்கட்டான நிலையில் நாட்டை பொறுப்பேற்று ஸ்திர நிலைக்கு கொண்டுவர அவர் எடுத்த நடவடிக்கையை நாங்கள் பார்த்தோம்.

அவர் திறமையானவர், அவரால் முடியும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது. அதனால் நாட்டை முன்னுக்கு கொண்டு செல்ல அவர் எடுத்த நடவடிக்கைகளுக்கு நான் ஆரம்பத்தில் இருந்து பாராட்டி வந்தேன். ரணில் விக்கிரம சிங்கவின் ஒரு சில தீர்மானங்கள் குறித்து நான் அந்த சந்தர்ப்பங்களில் எதிர்வு கூறிய பல விடயங்கள் அவ்வாறே இடம்பெற்றிருக்கின்றன.

ரணில் விக்கிரமசிங்கவின் திறமையும் ஆளுமையுமே இந்த நாட்டை இந்தளவு தூரத்துக்கு முன்னேற்றிச்செல்ல முடியுமாகி இருக்கிறது. அதனால், நான் இருந்த ஜாதிக்க ஹெல உறுமய கட்சி தலைமை எந்த தீர்மானம் எடுத்தாலும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க நான் தீர்மானித்து, தற்போது ஐக்கிய தேசிய கட்சி உறுப்புரிமையையும் பெற்றுக் கொண்டேன்.

ஜாதிக ஹெல உறுமய எப்போதும் தேசியவாத கொள்கையுடனே இருந்தது. தேசிய தேவைகளின் அடிப்படையிலேயே ஜாதிக ஹெல உறுமய எப் போதும் தீர்மானம் மேற்கொண்டுள்ளது. அதன் பிரகாரம் நாடு பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்திருக்கும் போது, அதனை கட்டியெழுப்ப ஆதரவளிப்பது தேசிய முக்கியத்துவமான நடவடிக்கையாகவே நான் பார்க்கிறேன்.

தேர்தலில் எந்த பக்கம் வெற்றி பெறும் என பார்த்து நான் தீர்மானம் மேற்கொள்ளவில்லை. வெற்றி பெறுவது எந்த பக்கமாக இருந்தாலும் சரியான பக்கத்தையே நான் தெரிவு செய்தேன்.

அதேபோன்று நாட்டு மக்களும் தற்போது சரியான பக்கத்தையே தெரிவு செய்து கொண்டிருக்கிறார்கள். அதனை தேர்தல் முடிவுகளின் போது கண்டு கொள்ள முடியும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமல் களமிறங்கியுள்ளதால் அச்சத்தில் ஜனாதிபதி ரணில்!

## உதயங்க வீரதுங்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 20

**பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்கு ஆதரவு திரட்டும் வகையில் பிரதான 120 கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக இலங்கைக்கான ரஷ்யாவின் முன்னாள் தூதுவரும் ராஜபக்ஷ குடும்ப உறுப்பினருமான உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.**

நாமல் ராஜபக்ஷ களமிறங்கியுள்ளதால் ரணில் விக்கிரமசிங்க அச்சத்தில் உள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாமல் ராஜபக்ஷவுக்கு ஆதரவு திரட்டும் வகையில் இடம்பெறவுள்ள பிரசார கூட்டங்களில் 40 கூட்டங்களில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்துகொள்வார். முதலாவது பிரசாரக் கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் களத்தில் தற்போதைய சூழ்நிலையில் சஜித் பிரேமதாஸவே முன்னிலையில் உள்ளார். நாமல் ராஜபக்ஷவுக்கு சஜித்துடன்தான் போட்டி உள்ளது. தேர்தல் பிரசாரம் ஆரம்பமான பின்னர் சஜித்தையும் அவர் முந்துவார்.

நாமல் ராஜபக்ஷ களமிறங்கியுள்ளதால் ரணில் விக்கிரமசிங்க அச்சத்தில் உள்ளார். பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர் பக்கம் சென்றிருந்தாலும், மக்கள் மொட்டுக் கட்சியுடன்தான் உள்ளனர் - என்றார். (அ)

# வடக்கு - கிழக்கு இணைய அனுமதிக்கவே மாட்டோம்!

## நாமல் ராஜபக்ஷ திட்டவட்டம்



கொழும்பு, ஓக. 20

வடக்கு - கிழக்கை இணைக்க அனுமதிக்க மாட்டோம் என பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

பேருவளையில் இடம்பெற்ற ஆதரவாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இணைந்த வடக்கு-கிழக்கில் அதிகாரப் பகிர்வு என்ற விடயம் தற்போது கோரிக்கையாக முன்வைக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் இணைந்த வடக்கு - கிழக்கில் அதிகார பகிர்வு என்ற விடயத்துக்கு தாம் ஆதரவு வழங்கப் போவதில்லை என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு-கிழக்குக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட மாட்டாது எனவும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# லொறி ரயிலுடன் மோதி கோர விபத்து!

## ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 20

கொஸ்கொட பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மஹா இந்துருவ ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள ரயில் கடவையில் நேற்று முற்பகல் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

காலியில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலில் கொஸ்கொடவில் இருந்து விறகு ஏற்றிச் சென்ற லொறி ஒன்று இவ்வாறு மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் லொறியில் பயணித்த இருவரில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில், இந்துருவ பிரதேசத்தை சேர்ந்த 55 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த மற்றைய நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)






# தொழுநோய், தொற்றுநோய் தொடர்பில் யாழில் விழிப்புணர்வு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 20

காலநிலை மாற்றத்தின் ஊடாக உடல், உள ரீதியிலான தாக்கங்கள் எவ்விதம் உள்ளன என்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் யாழ்ப்பாணத்தில் கலந்துரையாடல் ஒன்று நேற்றுமுன்தினம் மாலை நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட ஹொக்கி அணியுடன் இணைந்து இந்த விழிப்புணர்வு நிகழ்வை காவேரி கலா மன்றம் ஒழுங்குபடுத்தி நடத்தியது.

விளையாட்டு வீரர்கள் உடல் ஆரோக்கியம் தொடர்பான விடயத்தை சமூகத்தில் இருப்பவர்களுக்கு முன்மாதிரியாக இருப்பது மிக சிறப்பான விடயம். எனினும், விளையாட்டு வீரர்கள் சூழலியல் பார்வையில் அக்கறை உள்ளவர்களாக இருப்பதன் ஊடாக எவ்விதமாக உடல் ஆரோக்கியம் மிக்க ஒரு சமூகத்தை கட்டியெழுப்ப முடியும் என்பதை குறித்தும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவே இந்த செயற்பாட்டினை காவேரி கலா மன்றம் அறிமுகப்படுத்தியது.

குறிப்பாக தொழுநோயினால் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றபடியினால் அவைகளில் இருந்து நாம் தற்காத்துக் கொள்வதற்கான விழிப்புணர்வை பெறுவதற்கான ஒரு ஊக்கத்தையும் இந்த செயற்பாடுகள் கொடுக்கும் என்ற நோக்கத்தில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதில் விருந்தினர்கள், துறைசார் வைத்திய நிபுணர்கள், தொழுநோயாளர் மறு வாழ்வுக்கான சங்கத்தினர், காவேரி கலா மன்றத்தினர், யாழ்ப்பாண மாவட்ட ஹொக்கி அணியினர் என பலர் கலந்து கொண்டனர். (அ)

# தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் யாழில் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஓக. 20



இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் நிகழ்ச்சி திட்டத்தின் ஏற்பாட்டில் விழிப்புணர்வு நிகழ்வு நேற்று யாழ் பண்ணைக் கடற்கரைப் பகுதியில் இடம்பெற்றது.

இளைஞர், யுவதிகளை வினைத்திறனான, செயற்திறன் மிக்க ஒரு பிரஜைகளாக உருவாக்கும் நோக்கத்தோடு குறித்த விழிப்புணர்வு நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது சங்கானை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட சமூக மட்ட மற்றும் இளைஞர் கழகங்களுடைய தலைவர்கள் ஒருங்கிணைக்கப்பட்டு நடத்தப்பட்ட சித்திர போட்டியில் வரையப்பட்ட படங்கள் காட்சிப்படுத்தப்பட்டு அதன் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. (அ)

# ஒரு வாக்காளருக்கு 20 ரூபாய் போதும்!

## ஜனக ரத்நாயக்க சுட்டிக்காட்டு



கொழும்பு, ஓக. 20

ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வாக்காளருக்கு செலவிடப்படும் தொகை அதிகபட்சமாக 20 ரூபாவுக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும் என ஜனாதிபதி வேட்பாளர் ஜனக ரத்நாயக்க கோரிக்கை விடுத்துள்ளார்.

[illegible] நாயக்க தேர்தல்கள் ஆணைக் குழுவிடம் கடிதம் ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

தேர்தல் செலவு கட்டுப்பாட்டின் கீழ் தேர்தல் ஆணையம் ஒரு வாக்காளருக்கு செலவிடப்படும் தொகை குறித்து கருத்து கணிப்பு நடத்தியுள்ளனர். இதன்படி, பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஒரு வாக்காளருக்கு 300 ரூபா மற்றும் 250 ரூபா என பரிந்துரைத்துள்ளன. தேசிய மக்கள் சக்தி வாக்காளருக்கு 200 மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 250 ரூபாவை பரிந்துரைத்ததாகவும் ஜனக ரத்நாயக்க குறிப்பிட்டார்.

இந்நிலையில் வேட்பாளர்கள் பரிந்துரைத்தபடி தேர்தலுக்கு முன்மொழியப்பட்ட பெருந்தொகையில் பாரிய சிக்கல் இருப்பதாகவும், அதிகபட்ச தொகையை 20 ரூபாவாக தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்வதாகவும் ஜனாதிபதி வேட்பாளர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

இதேவேளை , ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர் ஒருவருக்கு செலவிடக்கூடிய அதிகபட்ச தொகை 1000 ரூபாவரை வழங்கப்பட வேண்டுமென பிரதான வேட்பாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (அ)

# ஆயிரம் கடவுச்சீட்டுக்கள் நாளாந்தம் வழங்கப்படும்

கொழும்பு, ஓக. 20

கடவுச்சீட்டு விநியோகத்தில் தற்போது நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளமையால், நாளாந்தம் 1000 கடவுச்சீட்டுகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்தார்.

பத்தரமுல்லை குடிவரவு குடியகல்வு திணைக்களத்தில் நிலவும் நெரிசல் தற்போது ஓரளவு நீங்கியுள்ளதாக அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடவுச்சீட்டு அச்சடிக்கும் புத்தகங்கள் பற்றாக்குறை காரணமாக சில தட்டுப்பாடுகளுடன் கடவுச்சீட்டு அச்சிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஆனால் தற்போது புதிய புத்தகங்கள் கிடைத்துள்ளன. இதனால் தினமும் 1000 கடவுச்சீட்டுகள் அச்சிடப்படும்.

ஒக்ரோபர் மாதம் வரை குடிவரவுத் திணைக்களத்தின் இணையத்தளத்தின் ஊடாக திகதிகளை முன்பதிவு செய்தவர்களுக்கு கடவுச்சீட்டு வழங்கப்படும்.

முன்பதிவு செய்ய கடினமாக இருக்கும், அவசர தேவைகள் உள்ளவர்களுக்கும் சிறப்பு வாய்ப்பின் ஊடாக கடவுச்சீட்டு வழங்கப்படும்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சி, நிற, இன பேதமின்றி ரணிலுக்கு எங்கள் ஆதரவு!

## அமைச்சர் பவித்ரா அறிவிப்பு

கொழும்பு, ஓக. 20

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கட்சி, நிற, இன பேதமின்றி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க அணி திரண்டுள்ளோம் என அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் முதல் தடவையாக சுயேச்சை வேட்பாளர் ஒருவருக்கு இவ்வளவு ஆதரவு கிடைத்துள்ளது.

இதற்கு முன்னர் சுயேச்சை வேட்பாளருக்கு ஆதரவு வழங்கியதில்லை. ஆனால், இம்முறை கட்சி, நிற, இன பேதமின்றி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க அணி திரண்டுள்ளோம்.

மக்கள் குறித்தும், நாடு குறித்தும் சிந்திக்கும் அனைவரும் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தத் தீர்மானித்துவிட்டனர்.

நாடு மிகவும் பாதாளத்தில் வீழ்ந்தது. பல மைல் தூரம் காஸ் வரிசை இருந்தது. பல மைல் தூரம் எரிபொருள் வரிசை இருந்தது. மின்சாரம் தடைப்பட்டிருந்தது. பஞ்சம் வரும் என்றும் மக்கள் அஞ்சினார்கள். இருந்த ஜனாதிபதி தப்பியோடினார். எதிர்க்கட்சித் தலைவர் ஒளிந்துகொண்டார். நாடு நிர்க்கதிக்குள்ளானது.

"அறகலய" போராட்டத்துக்குச் சென்றபோது எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தை விரட்டி விரட்டி அடித்ததைப் போல் மீண்டும் விரட்டியடித்து விடுவர் என்ற அச்சத்திலேயே அவர் நாட்டைப் பொறுப்பேற்க முன்வரவில்லை - என்றார். (அ)

# கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த அமெரிக்க நவீன கடற்படை கப்பல்!


கொழும்பு, ஓக. 20

அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான 'யு.எஸ்.எஸ். ஸ்புறுவன்ஸ்' என்ற கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

வழங்கல் மற்றும் சேவை தேவைகளை பூர்த்தி செய்வதற்காக நேற்று குறித்த கப்பல் நாட்டை வந்தடைந்தது.

இலங்கை கடற்படையின் வரவேற்புடன் கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்ட 'யுஎஸெஸ் ஸ்புறுவன்ஸ்' கப்பலானது 160 மீற்றர் நீளம் கொண்டுள்ளதுடன், மொத்தம் 338 பணியாளர்களை கொண்டு இயக்கப்படுகிறது.

மேலும், வழங்கல் மற்றும் சேவை தேவைகளை பூர்த்தி செய்த பின்னர், 'யு.எஸ்.எஸ். ஸ்புறுவன்ஸ்' கப்பல் இன்று நட்டை விட்டு புறப்பட உள் ளது.



ஜிகாபிட் ஈதர் நெட் டேட்டா மல்டிபிளக்ஸ் சிஸ்டம் பொருத்தப்பட்ட அமெரிக்க கடற்படையின் அழிப்பான் கப்பல்களில் இது முதன்மை பெறுகிறது. (அ)

# சந்நிதி ஆலய தேர்த்திருவிழாவில் 35 பவுண் தங்க நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஓக. 20

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வளாகத்தில் 35 பவுண் வரையான தங்க நகைகள் திருட்டுப் போயுள்ளன.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்றது.

தேர்த் திருவிழாவைக் காண நாட்டின் பல பாகங்களிலுமிருந்தும் பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் செல்வச்சந்நிதி ஆலயத்தில் திரண்டனர்.

இதனை தமக்கு சாதகமாக பயன்படுத்திய திருடர்கள், பக்தர்கள் அணிந்திருந்த தங்க நகைகளை திருடியுள்ளனர்.

இவ்வாறு தேர்த்திருவிழாவில் மாத்திரம் 35 பவுண் வரையான தங்க நகைகள் திருட்டுப் போயுள்ளதாக பொலிஸாரால் தெரிவிக்கப் படுகின்றது. (அ)

# இலங்கையின் மின் கட்டணம் சுமார் மூன்று மடங்கு அதிகம்

கொழும்பு, ஓக. 20

ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையின் மின்சாரக் கட்டணம் சுமார் மூன்று மடங்கு அதிகம் என அட்வோகாடா நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன் நிறைவேற்று அதிகாரி தனநாத் பெர்னாண்டோ கருத்து தெரிவிக்கும் போதே இதனை கூறினார்.

மின்சார கட்டண அளவீட்டு திட்டத்தின் போது மின்சார அலகு ஒன்றிற்கான உற்பத்திக்கான செலவு மற்றும் மின்சார உற்பத்தியின் காலம் ஆகியவை கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் மாலை 6:00 மணி முதல் இரவு 11:00 மணி வரை அதிக அளவில் மின்சாரம் பயன்படுத்தப்படுகிறது.

இதனால், நீர்மின்சாரத்திற்கு மேலதிகமாக எண்ணெய் மற்றும் நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்கள் செயற்படுவதனால்

இலங்கையில் மின்சாரக் கட்டணம் உயர்வடைந்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

உலகின் சில நாடுகளில் மின்சார நுகர்வோருக்கு புதிய முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

வாடிக்கையாளர்கள் தங்கள் தேவைக்கு ஏற்ப மின்சாரத்தை 'ப்ரீ-பெய்டு' முறைகள் மூலம் பெறலாம். இதனால் அவர்கள் அதிக மின் கட்டணத்தை செலுத்த வேண்டியதில்லை எனவும் குறிப்பிட்டார்.

மேலும், ஸ்மார்ட் மின்சார மீற்றர்களை அறிமுகம் செய்வதன் மூலம் நுகர்வோர் தங்கள் மின் பயன்பாட்டை குறைக்க முடியும். இவ்வாறான செயற்பாட்டின் மூலம் வாடிக்கையாளர்கள் மாலை 6 மணி முதல் இரவு 11 மணி வரை மின்சார பாவனையை நிர்வகித்து மின் கட்டணத்தை குறைக்க முடியும் என அவர் வலியுறுத்தினார். (அ)

# தமிழ்ப் பொது வேட்பாளர் குறித்து மக்கள் அலட்டிக் கொள்ளவில்லை

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஓக. 20

பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நாட்டை மீட்டவருக்கு இன்றல்ல முன்பிருந்தே ஆதரவு வழங்கியுள்ளேன் எனவும், தமிழ் வேட்பாளர் குறித்து மக்கள் அலட்டிக் கொள்ளவும் இல்லை எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஊடகவியலாளரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

40 பேர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட விண்ணப்பித்திருந்தனர். அவர்களில் 39 பேர் போட்டியிடுகின்றனர். தேர்தல் சுமுகமாக போகும் என்று நம்புகிறேன்.

பொது வேட்பாளர் குறித்து மக்கள் மத்தியில் சாதகமான அபிப்பிராயம் இருப்பதாக தெரியவில்லை.

நாடு பொருளாதார வீழ்ச்சிக்குள் சென்று கொண்டிருந்த போது, இன்று ஜனாதிபதி வேட்பாளர்களாக போட முன்வந்திருப்பவர்கள் ஒவ்வொருவரிடமும் அன்றைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச நாட்டை பொறுப்பெடுத்து பிரச்னையிலிருந்து மீட்டெடுக்க உதவுமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர யாரும் முன்வரவில்லை. அவர் துணிவோடு வந்து ஆற்றலையும், வல்லமையையும் வெளிப்படுத்தியுள்ளார்.

அன்றிலிருந்து அவருக்கே வெளிப்படையாக ஆதரவு தெரிவித்து வந்துள்ளேன். அதேவேளை தமிழ் பேசும் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கு அவரது காலப்பகுதியில் தீர்வு காணலாம் என்று நினைக்கிறேன்.

அவர் மாத்திரம் வென்று வந்தால் போதாது. அவருடன் சேர்ந்து பயணிக்கக்கூடியவர்களும் வெற்றி பெற வேண்டும்.

ஈ.பி.டி.பியை எடுத்துக்கொண்டால், ஜனாதிபதி தேர்தல் முடிந்து நடக்கப்போகும் நாடாளுமன்ற தேர்தலிலும் ஈபிடிபிக்கும் கணிசமான வாக்குகளும், ஆசனங்களும் கிடைக்குமாக இருந்தால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்குப் பிறகு எமது மக்கள் நீண்டகாலமாக எதிர்கொண்ட பிரச்னைகளுக்கும் குறுகிய காலத்திற்குள் தீர்வு காணலாம் என்று நம்புகிறேன். நான் ஆதரிப்பதற்கு அதுவும் ஒரு காரணமாகும் - என்றார். (அ)

# நாட்டில் கருக்கலைப்பை சட்ட ரீதியாக்கவேண்டும்

## இராஜாங்க அமைச்சர் கீதா கோரிக்கை

கொழும்பு, ஓக. 20

கருக்கலைப்பை சட்ட ரீதியாக்க வேண்டுமென இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

தகாத செயற்பாட்டுக்கு உள்ளாகும் பதின்ம வயதுடைய சிறுமியர் கருத்தரிக்கும்போது அவற்றை கலைப்பதற்கு சட்ட ரீதியான அனுமதி வழங்கப்பட வேண்டுமென கோரியுள்ளார்.

இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தகாத செயற்பாட்டுக்கு உள்ளாகும் சிறுமியர் எந்த தவறும் செய்யாத அப்பாவிகள் எனவும், அவர்கள் கருவினை கலைப்பதற்கு அனுமதிக்கப்படவேண்டுமெனவும் அவர் கோரியுள்ளார்.

இந்த ஆண்டின் முதல் அரையாண்டுப் பகுதியில் பதின்ம வயதுடைய சிறுமியர் கருத்தரித்த எண்ணிக்கை 58 வீதத்தினால் அதிகரித்துள்ளது.

2023 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியுடன் ஒப்பீடு செய்யும் போது இந் த அதிகரிப்பு பதிவாகியுள்ளது. (அ)

# நேரடி விவாதத்துக்கு தயாராகும் பிரதான ஜனாதிபதி வேட்பாளர்கள்!

கொழும்பு, ஓக. 20

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் ஆறு பேரின் பங்குபற்றுதலுடன் நேரடி விவாதம் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

குறித்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி ஊடகங்களுக்கு கருத்து கூறும்போதே இதனை கூறினார்.

எதிர்வரும் செப்ரெம்பர் 07 ஆம் திகதி இந்த விவாதத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பிரதான வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க, அநுர குமார திஸாநாயக்க, சஜித் பிரேமதாஸ, நாமல் ராஜபக்ஷ, திலித் ஜயவீர மற்றும் அரிய நேத்திரன் ஆகியோருக்கு இதில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விவாதத்தை அனைத்து இலத்திரனியல் தொலைகாட்சிகள் மற்றும் சமூக ஊடக வலையமைப்புகள் ஊடாக நேரடியாக ஒளிபரப்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்தார். (அ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சி, பொறுப்புக்கூறலை ஊக்குவிப்பதற்கு விசேட திட்டம்



கல்முனை, ஓக. 20

**சமூகச் செயல்திட்டங்களில் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை ஊடாக நல்லாட்சியை உறுதிப்படுத்தும் நோக்கில் செயல்படும் திட்டத்தின் ஏற்பாட்டில், அம்பாறையில் விசேட திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.**

இந்த மாவட்டத்திலுள்ள சிவில் சமூக மற்றும் சமூக ஊடக செயல்பாட்டாளர்களின் பங்கு பற்றலுடன் முன்னெடுக்கப்பட்ட விசேட செயலமர்வு சனிக்கிழமை மாளிகைக்காடு பாவா றோயலி வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களின் வினைத்திறனை அதிகரிக்கும் நோக்கில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நடைபெற்ற இந்தப் பயிற்சி பட்டறையில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள சமூக, பொருளாதார மற்றும் சூழலியல் பிரச்னைகள் உட்பட நிலைபேறான அபிவிருத்தியைப் பாதிக்கும் பல்வேறு விடயதானங்கள் குறித்து முன்வைப்புகள் இடம்பெற்றன.

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அஸ்லம் சஜாவின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இந்தப் பயிற்சிப் பட்டறையில் குரல்கள் இயக்கத்தின் செயல்பாட்டாளரும் சட்டத்தரணியுமான அம்ஜத் முகம்மட், புழுதி சமூக உரிமைக்கான அமைப்பின் செயல்பாட்டாளர் கோபகன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

இரண்டு அமர்வுகளாக நடைபெற்ற இந்த பயிற்சிப் பட்டறையின், இரண்டாம் அமர்வின் பிரதம விருந்தினராக ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான முன்னாள் வதிவிட பிரதிநிதி அப்துல் அஸீஸ், சிறப்பு விருந்தினராக அமெரிக்கன் ஸ்பேஸஸ் பணிப்பாளர் முகம்மட் நௌஸாத் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



## கல்முனை ஸாஹிரா கல்லூரியின் மாணவர்கள் சதுரங்கத்தில் சம்பியன்

கல்முனை, ஓக. 20

சதுரங்கத்தில் மீண்டும் மாகாண சம்பியன்களான கல்முனை ஸாஹிரா கல்லூரி மாணவர்கள் தேசிய மட்டத்துக்கு தெரிவாகியுள்ளனர்.

இலங்கை பாடசாலை சதுரங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாணத்துக்கான சதுரங்க போட்டி திருகோணமலை சிங்கள மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் ஆண்களுக்கான 20 வயது பிரிவில் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி மாணவன் எம். ஏ. தமீம் சம்பியனாகவும், ஆண்களுக்கான 17 வயது பிரிவில் எம். சனீப் சம்பியனாகவும் அதே பிரிவில் ஏ. எஸ். ஏ. மிஜ்வாத் இரண்டாம் நிலையையும், ஆண்களுக்கான 15 வயது பிரிவில் ஏ. அர்ஹம் பாவீஸ் இரண்டாம் நிலையையும் பெற்றுக்கொண்டதோடு ஐ. சஹ்மி, எம். நிசாத், ஏ. அனூப் மற்றும் ஏ. செய்மி ஆகிய மாணவர்களும் தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகினர்.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவான மாணவர்களுக்கும், மாணவர்களுக்கு பயிற்சியளித்து அழைத்துச் சென்ற சதுரங்க பொறுப்பாசிரியர் எம். வை. எம். றகீப் மற்றும் கல்லூரியின் சதுரங்க பயிற்றுவிப்பாளர் எஸ். எல். சுஹ்தான் ஆகியோருக்கு கல்லூரி அதிபர் எம். ஐ. ஜாபிர் உள்ளிட்ட கல்விச் சமூகத்தினர் வாழ்த்துகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர். (ஏ)




## சுற்றுலா பயணிகளின் வருகையால் களைகட்டும் அறுகம்குடா கடற்கரை

பொத்துவில், ஓக. 20

அம்பாறை, பொத்துவில் அறுகம்குடா பிரதேசத்துக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனால் அருகம்குடா வளைகுடா கடற்கரையை ஒரு முக்கிய சுற்றுலாத் தலமாக மேம்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கிழக்கு மாகாணத்தில் உள்ள திருகோணமலை மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் உள்ள சில கடற்கரைப் பகுதிகள் சர்வதேச அரங்கில் பல்வேறு தர இடத்தினைப் பெற்றிருக்கின்றன. அந்த வகையில் அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள அறுகம்குடா கடற்கரைப் பிரதேசதம் பல்வேறு சிறப்பம்சங்களை தன்னகத்தே கொண்டுள்ளதால் இந்தப் பிரதேசத்துக்கு தினமும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் ஆயிரக்கணக்கானோர் தமது பொழுதைப் போக்குவதற்காக வருகை தருகின்றனர். (ஏ)

## அறுகம்குடா அரை மரதன் ஓட்டப்போட்டியில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் பங்கேற்பு






பொத்துவில், ஓக. 20

சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கும் நோக்கில் நடத்தப்பட்ட அரை மரதன் ஓட்டப் போட்டியில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

அறுகம்குடா அபிவிருத்தி ஒன்றியம் ஏற்பாடு செய்து பொத்துவில் அறுகம்குடா பிரதேசத்தில் நடத்திய அரை மரதன் ஓட்டப்போட்டியின் 21. 1 கிலோ மீற்றர் போட்டியில் ஆண்கள் பிரிவில் விமல் காரியவசம் முதலாமிடத்தையும், ரி. ரத்னபால இரண்டாமிடத்தையும், டென்மார்க்கை சேர்ந்த பெஸ்டியன் குலோஸ்கோ மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டார். பெண்கள் பிரிவில் கென்யாவைச் சேர்ந்த அனிக்கா பேலிம் முதலாமிடத்தையும், ஜேர்மனியை சேர்ந்த டீ. அனிக்கா டோான் இரண்டாமிடத்தையும், அவுஸ்திரேலியாவை சேர்ந்த சலாலி மூன்றாமிடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

குறித்த மரதன் ஓட்டப் போட்டி 21.1 கிலோ மீற்றர் அரை மரதன், 10 கிலோமீற்றர் மற்றும் 5 கிலோமீற்றர் என மூன்று பிரிவுகளாக இடம்பெற்றது. 5 கிலோமீற்றர் போட்டியில் சிறுவர்கள் மாத்திரம் கலந்துகொண்டனர். ஏனைய இரு பிரிவுகளிலும் பிரபல மரதன் ஓட்ட வீரர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

அறுகம்குடா அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் இஸட். எம். ஹாஜித் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். எம். முஷாரப் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பித்தார்.

குறித்த மரதன் ஓட்டப் போட்டியில் கலந்துகொண்டு முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களுக்கு பணப் பரிசில்களுடன் பதக்கம் மற்றும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. அறுகம்குடா அபிவிருத்தி போரம் 6ஆவது தடவையாக நடத்திய இந்த மரதன் ஓட்டப்போட்டியில் உள்நாட்டு, வெளிநாட்டு வீரர்கள் என 260 பேர் பங்குபற்றினர். (ஏ)

## விமூர்தானந்தஜி மஹராஜ் சுவாமி நாளை மட்டக்களப்புக்கு வருகிறார்

மட்டக்களப்பு, ஓக. 20

இந்தியாவின் தஞ்சாவூர் இராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சிறீ மத்சுவாமி விமூர்தானந்தஜி மஹராஜ் நாளை 21 ஆம் திகதி புதன்கிழமை முதல் 27ஆம் திகதி வரை மட்டக்களப்புக்கு வருகை தரவுள்ளார்.

சிறீ மத் விமூர்தானந்தஜி சுவாமி, மட்டக்களப்பு பிரதேசத்துக்கு வரும் காலப்பகுதியில் கல்லடி, திருச்செந்தூர் கொக்கட்டிச்சோலை, மண்டூர் மற்றும் காரைதீவு போன்ற பல இடங்களில் சொற்பொழிவுகளை ஆற்றவுள்ளார்.

மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் ஆச்சிரமத்தில் சுவாமி விமூர்தானந்தஜி 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5. 30 மணி தொடக்கம் 7. 00 மணி வரை சிறப்பு சொற்பொழி வாற்றவுள்ளார்.

இதேவேளை, மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் அறநெறிப் பாடசாலை வைர விழாவில் சிறீ மத் சுவாமி விமூர்தானந்தஜி மஹராஜ் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

அத்தோடு, மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் அறநெறிப் பாடசாலையின் வைர விழா நிகழ்வுகள் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9. 30 மணி தொடக்கம் 12. 30 மணி வரை சுவாமி விபுலானந்தா ஞாபகார்த்த மணிமண்டபத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளன.

இதில் சிறீ மத் சுவாமி விமூர்தானந்தஜி மஹராஜ் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஏ)

## மண்டூர் கந்தசுவாமி கோவில் தீர்த்தோற்சவம்





"சின்னக்கதிர்காமம்" என அழைக்கப்படும் மண்டூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த பெருந்திருவிழாவின் தீர்த்தோற்சவம் நேற்றுத் திங்கட்கிழமை காலை நடைபெற்றது. (ஏ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்த பேச்சுக்கு இடையே காஸாமீது இஸ்ரேல் தாக்குதல்!

## 6 குழந்தைகள் உட்பட 20 பேர் உயிரிழப்பு

காஸா, ஓக. 20

**போர் நிறுத்த ஒப்பந்த பேச்சுகளுக்கு இடையே காஸா மீது இஸ்ரேல் நடத்திய கொடூரத் தாக்குதலில் 20 பேர் உயிரிழந்தனர்.**

இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பு கடந்த ஆண்டு ஒக்ரோபரில் கொடூரத் தாக்குதல் நடத்தியது. இதில், இஸ்ரேல் மக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர். பணயக் கைதிகளாக பலர் சிறைபிடித்து செல்லப்பட்டனர்.

அந்த நாளில் இருந்து, இரு தரப்பினருக்கும் இடையேயான மோதல் தீவிரமடைந்தது.


காஸா மற்றும் இஸ்ரேல் இடையே நடந்து வரும் இந்த தீவிர மோதலின் ஒரு பகுதியாக இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் 6 குழந்தைகள் உட்பட 20 பேர் பலியாகினர் என தெரியவந்துள்ளது.

வடக்கு நகரில் ஜபாலியா பகுதியில் இரண்டு அடுக்கு மாடி குடியிருப்புகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. மத்திய காஸா, கான் யூனிஸ் நகரின் தெற்கே, டெய்ர் அல் - பலா பகுதிகளிலும் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

எனினும், பயங்கரவாதிகளையே குறிவைக்கிறோம் என்றும் பொதுமக்கள் பலியாக காரணம், குடியிருப்பு பகுதிகளில் போராளிகள், ஆயுதங்கள், சுரங்கங்கள் மற்றும் ரொக்கெட்களை மறைத்து வைக்க பயன்படுத்தி கொள்கின்றனர் என்று இஸ்ரேல் தொடர்ந்து கூறுகிறது.

அமெரிக்கா, எகிப்து மற்றும் கட்டார் ஆகிய நாடுகள் டோஹாவில் 2 நாட்களாக நடத்திய பேச்சுகளில் ஒரு முடிவு எட்டப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் காஸாவை இஸ்ரேல் தாக்கியுள்ளது.

இஸ்ரேல் புதிதாக கோரிக்கைகளை வைக்கிறது என கூறி அதற்கு ஹமாஸ் உடன்படாத சூழலில், பேச்சுகளில் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. இந்த நிலையில், காஸா மீது இஸ்ரேல் தாக்குதலை நடத்தியதில் இருபது பேர் உயிரிழந்தனர். (எ)




# பெண் மருத்துவர் கொலை: நீதி கேட்டு இந்தியா முழுவதும் மருத்துவர்கள் போராட்டம்!

புதுடில்லி, ஓக. 20

இந்தியாவின் கொல்கத்தாவில் பயிற்சி பெண் மருத்துவர் பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்யப்பட்டதை கண்டித்தும் உடனடியாக நீதி வழங்க நடவடிக்கை எடுக்க கோரியும் இந்தியா முழுவதும் மருத்துவர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் மருத்துவ சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் உள்ள ஆர். ஜி. கர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கடந்த 9ஆம் திகதி 31 வயது பயிற்சி பெண் மருத்துவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்டார்.

இந்த நிலையில் மருத்துவர் கொலையை கண்டித்தும் விரைவாக நீதி கிடைக்க வேண்டும் என்று கோரியும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் மருத்துவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வலியுறுத்தியும் இந்திய மருத்துவ சங்கம் வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தது. இதன்படி நாடு முழுவதும் மருத்துவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

# டாக்காவில் மூடப்பட்ட கல்வி நிறுவனங்கள் திறப்பு

டாக்கா, ஓக. 20

பங்களாதேஷில் ஒரு மாதத்துக்குப் பிறகு பாடசாலைகள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

பங்களாதேஷில் 30 சதவிகித இடஒதுக்கீட்டுக்கு எதிராக போராட்டம் வெடித்தது. ஜூன் மாதம் வெடித்த இந்தப் போராட்டத்தில் வன்முறை ஏற்பட்டது. நாடு முழுவதும் பதற்றம் அதிகரித்ததால் கடந்த மாதம் 17 ஆம் திகதி அங்குள்ள கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டன.

இந்த நிலையில் பாடசாலைகள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்களை மீண்டும் திறக்க இடைக்கால அரசு முடிவு செய்தது. இதன்படி 18ஆம் திகதி முதல் கல்வி நிறுவனங்களை திறக்குமாறு கல்வி அமைச்சு உத்தரவிட்டது. இதன்படி ஒரு மாதத்துக்குப் பிறகு நாடு முழுவதும் பாடசாலைகள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்கள் திறக்கப்பட்டன. (எ)

# பேச்சுக்கு முன்வந்தது ரஷ்யா தாக்குதல் நடத்திய உக்ரைன்

## போர் நிறுத்த முயற்சி தோல்வி

கீவ், ஓக. 20

போர் நிறுத்த பேச்சுக்கு ரஷ்யா முன்வந்த நிலையில் உக்ரைனின் தாக்குதலால் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் இன்று 907 நாளாக நீடித்து வருகிறது. இந்தப் போரில் இரு தரப்பிலும் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

இந்த போரில் உக்ரைனுக்கு ஆயுத உதவிகளை அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள் வழங்கி வருகின்றன. போரை நிறுத்த பல்வேறு நாடுகள் முயற்சித்துவரும் நிலையில் அமைதி பேச்சுக்கு இரு நாடுகளும் உடன்படாததால் போர் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இதனிடையே, 2 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வரும் போரை முடிவுக்கு கொண்டுவர ரஷ்யா பேச்சுக்கு முன்வந்த நிலையில் உக்ரைன் நடத்திய தாக்குதலால் அந்த முயற்சி தகர்ந்துள்ளது. கட்டார் தலைநகர் டோஹாவில் இம்மாத தொடக்கத்தில் உக்ரைன் - ரஷ்யா இடையே போர் நிறுத்த பேச்சுகள் நடைபெறவிருந்தது.

இந்த நிலையில், ரஷ்யாவின் குர்ஷ்க் மாகாணத்தின் மீது உக்ரைன் திடீர் தாக்குதல் நடத்தியது. கடந்த 6ஆம் திகதி ஆயிரத்துக்கும் மேற்பட்ட உக்ரைன் படையினர், இராணுவ கவச வாகனங்கள், ஆயுதங்களுடன் ரஷ்யாவின் குர்ஷ்க் மாகாணத்துக்குள் நுழைந்தனர். மேலும், ரஷ்ய படையினர்களையும் பணயக் கைதிகளாக சிறைபிடித்தனர். அந்தப் பகுதியில் இராணுவ நிலைகளை அமைத்துள்ள உக்ரைன் இராணுவம் சுமார் 400 சதுர கிலோ மீற்றர் பரப்பளவை கைப்பற்றியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

உக்ரைனின் இந்த திடீர் தாக்குதலால் டோஹாவில் நடைபெறவிருந்த போர் நிறுத்த பேச்சுகளில் இருந்து ரஷ்யா பின்வாங்கியுள்ளது. இதன் மூலம் உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் மேலும் பல மாதங்கள் நீடிக்கலாம் என தகவல் வெளியாகியுள்ளது. (எ)

# ரஷ்யாவின் இரண்டாவது முக்கிய பாலம் தகர்ப்பு!

## உக்ரைன் அதிரடி தாக்குதல்



கீவ், ஓக. 20

ரஷ்யாவின் இரண்டாவது முக்கிய பாலம் தகர்க்கப்பட்டது என்று உக்ரைன் அறிவித்துள்ளது.

உக்ரைனுக்கு எதிராக 2 ஆண்டுகளுக்கு முன் ரஷ்யா போர் தொடுத்தது. தொடக்கத்தில் பல நகரங்களை ரஷ்யா கைப்பற்றியது. எனினும், அவற்றை உக்ரைன் படைகள் மீட்டன. உக்ரைனுக்கு அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் ஜேர்மனி போன்ற நாடுகள் ஆயுதங்கள் மற்றும் நிதியுதவி ஆகியவற்றை செய்து வருகின்றன.

இந்த நிலையில், ரஷ்யாவின் குர்ஸ்க் பகுதியில் அமைந்துள்ள பாலம் ஒன்றை உக்ரைன் தகர்த்துள்ளது. ரஷ்யாவின் வான்னோயி நகரருகே அமைந்திருந்த இந்த பாலம் தகர்க்கப்படும் வான்வழி வீடியோ ஒன்றை வெளியிட்ட உக்ரைனின் விமானப் படைத் தளபதி மைகோலா ஒலெஸ்சக், மற்றொரு பாலம் தகர்க்கப்பட்டது என தெரிவித்துள்ளார்.

எனினும், இந்த தாக்குதல் எப்போது நடைபெற்றது என்று தெரியவில்லை. ரஷ்ய பகுதிகளில் பெரியளவில் தாக்குதல் நடத்தும் நோக்கில், கடந்த 6ஆம் திகதி அதன் எல்லை பகுதிகளில் படைகள் மற்றும் கவச வாகனங்களை உக்ரைன் அனுப்பியுள்ளது.

இது ரஷ்யாவின் 2ஆவது முக்கிய பாலமாகும். இதுபற்றி உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி குர்ஸ்க் பகுதியில் உரையாற்றிய போது அனைத்து பகுதிகளிலும் நம்முடைய படையினர் சிறந்த முறையில் பணியாற்றுகின்றனர் என கூறினார். கிளஷ்கோவோ பகுதியில் பாலம் ஒன்றை தகர்த்து விட்டோம் என கடந்த வெள்ளிக்கிழமை உக்ரைன் அறிவித்திருந்தது. இந்த சூழலில் மற்றொரு பால தகர்ப்பு பற்றியும் அறிவித்துள்ளது. (எ)

# “கமலா ஹாரிஸை விடவும் நான் அழகாக இருக்கிறேன்”

வாஷிங்டன், ஓக. 20

கமலா ஹாரிஸை விடவும் தான் அழகாக இருப்பதாகவும் அவரை தோற்கடிப்பது தனக்கு மிகவும் எளிது எனவும் ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில் குடியரசு கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடுகிறார்.

இந்த நிலையில், பென்சில்வேனியாவில் நடைபெற்ற பிரசார பொதுக்கூட்டத்தில் ட்ரம்ப் தெரிவித்தவை வருமாறு,

ஜோ பைடனை விடவும் கமலா ஹாரிஸை தோற்கடிப்பது மிகவும் எளிதானது என நான் நம்புகிறேன். பல முக்கியமான கொள்கைகளை வகுப்பதில் கமலா ஹாரிஸ் தீவிர இடதுசாரியைப்



போல் நடந்து கொள்கிறார். அவர் சிரிப்பதை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா? அது ஒரு முட்டாளின் சிரிப்பைப் போல் இருக்கும். கமலா ஹாரிஸை விடவும் நான் அழகாக இருக்கிறேன்- என்றார் ட்ரம்ப். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாணய நிதிய நிபந்தனைகளை மீறியுள்ளார் ஜனாதிபதி ரணில்!

## ஹர்ஷ டி சில்வா குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக. 20

**சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளைப் பாதுகாப்பதாக உறுதியளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, தற்போது அவற்றை மீறியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா குற்றம் சுமத்தியுள்ளார்.**

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அனுராதபுரத்தில் உரையாற்றிய ஜனாதிபதி, அரச பணியாளர்களுக்கான சம்பளத்தை 25,000 ரூபாவாக அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும் தற்போது 17,000 ரூபாவாகவுள்ள அரச பணியாளர்களுக்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவே 25,000 ஆக அதிகரிக்கவுள்ளதாக அவர் கூறியுள்ளார் என்பது தெரியவந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், பொருளாதாரம் மீட்சியை அடைந்து வரும் சந்தர்ப்பத்தில் அரச பணியாளர்களுக்கான சம்பளத்தை அதிகரிக்க முடியாதெனக் கூறிய ஜனாதிபதி, தேர்தல் நெருங்கும் நேரத்தில் இவ்வாறான வாக்குறுதிகளை வழங்குகின்றார் எனவும் ஹர்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

அவரின் அந்த மாற்றம், தற்போது அவருடன் இணைந்துள்ள சிலரின் அறிவுறுத்தலுக்கு அமைய மேற்கொள்ளப்படுகிறதா என்பது தெரியவில்லை என்பதுடன், ஜனாதிபதி பொறுப்புடன் கூறிய கருத்துக்களை தற்போது பொறுப்பற்ற விதத்தில் கூறி வருகின்றார் எனவும் கூறினார்.

எனினும், சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் திருத்தப்பட வேண்டும் என ஆரம்பம் முதல், ஐக்கிய மக்கள் சக்தி கூறி வந்த நிலையில் அதனை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தற்போது மேற்கொள்ள முன்வந்துள்ளமையை வரவேற்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார். (அ)

# சிறுமி கூட்டு வன்கொடுமை; ஐந்து சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, ஒக. 20

களுத்துறை, தியகம பிரதேசத்தில் 12 வயது சிறுமி ஒருவரை பலமுறை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக கூறப்படும் ஐந்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஐவரும் இந்த சிறுமி யின் குடும்ப சூழ்நிலையைப் பயன்படுத்தி பொருட்கள் மற்றும் பண உதவிகளை வழங்குவதாக கூறி சுமார் இரண்டு வருட காலமாக இந்த சிறுமியை பலமுறை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் 70 வயதுடைய முதியவர் ஒருவரும் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை களுத்துறை வடக்கு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# தப்பியோடிய அர்ஜுனவை நாட்டுக்கு கொண்டுவருவோம்!

## அநுரகுமார திஸநாயக்க உறுதி



கொழும்பு, ஒக. 20

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை நாட்டுக்கு கொண்டுவருவதே தேசிய மக்கள் அரசாங்கத்தின் முன்னுரிமைக்குரிய விடயம் என்று கட்சியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூருக்கு தப்பியோடிய அர்ஜுன மகேந்திரனை இலங்கைக்கு கொண்டுவருவதே கட்சியின் முன்னுரிமைக்குரிய விடயம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு - கிரிபத்கொடையில் நடைபெற்ற கட்சியின் பிரசார கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே இதனை தெரிவித்துள்ள அவர்,

"அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கத்துடனேயே தேசிய மக்கள் சக்தி ஆட்சியை கைப்பற்றும், ஊழல் மோசடியை ஒழிக்கும். வரி செலுத்தாமல் உள்ள பலரிடமிருந்து 16 ஆயிரத்து 900 கோடி ரூபாயை பெற முடியும் அவர்களை அடையாளம் கண்டுள்ளோம். அதற்கான நடவடிக்கைளை முன்னெடுப்போம் - என்றார். (ஐ)

# குரங்கம்மை நோய் பரவல் விழிப்புணர்வு அதிகரிப்பு!

கொழும்பு, ஒக. 20

உலகளாவிய ரீதியில் குரங்கம்மை நோய் பரவல் அதிகரித்துள்ளமையால் இலங்கையானது நோய் தொடர்பில் விழிப்புணர்வை அதிகரித்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவிகின்றனர்.

குரங்கம்மை நோயை சர்வதேச சுகாதார அவசர நிலையாக உலக சுகாதார ஸ்தாபனம் பிரகடனம் செய்துள்ளது.

குரம்மை நோய் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகளாவாக பதிவாகவில்லை. தற்காலிக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் செயலில் இருப்பதால் நோய்த் தாக்கம் தொடர்பில் அச்சுறுத்தல் குறைவாக உள்ளது. எனினும், கண்காணிப்பு நடவடிக்கைகளை அதிகரிக்க சுகாதார அமைச்சகம் கலந்தாலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல நாடுகளில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவு அதிகரித்தமையால் விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களில் கண்காணிப்பு நடிவடிக்கைகளை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. (ஐ)

# நாட்டில் எம்பொக்ஸ் பரவுவதைத் தடுக்க விமான நிலையங்களில் விசேட பாதுகாப்பு

கொழும்பு, ஒக. 20

உலகளாவிய ரீதியில் எம்பொக்ஸ் என்ற குரங்கு காய்ச்சல் தற்போது வேகமாகப் பரவி வரும் நிலையில்இலங்கையில் பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி விமான நிலையங்கள், துறைமுகங்கள் ஆகியவற்றில் அதிகபடியான பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எம்பொக்ஸ் நோய் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் உலக சுகாதார ஸ்தாபனம் அதனை உலக பொது சுகாதார அவசர கால நிலையாக பிரகடனப் படுத்தியுள்ளது. அதேநேரம் இதற்கான தடுப்பூசிகளை உற்பத்தி செய்யும் செயற்பாடுகளை விரைவுபடுத்துமாறு உலக சுகாதார ஸ்தாபனம் விடயத்துடன் தொடர்புடைய நிறுவனங்களை அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில், எம்பொக்ஸ் என்ற குரங்கு காய்ச்சலானது ஆபிரிக்க கண்டத்தின் 13 நாடுகளில் பரவியுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. (அ)

# தேர்தல் முறைகேடு குறித்து முறைப்பாடுகள் அதிகரிப்பு!

கொழும்பு, ஒக. 20

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 566ஆக அதிகரித்துள்ளது என தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது.

ஜூலை 31ஆம் திகதி முதல் இம்மாதம் 17ஆம் திகதி வரை இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது.

39 முறைப்பாடுகள் தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பானவை என்றும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் 16 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வருடம் 2 இலட்சத்து 25 ஆயிரம் அரச ஊழியர்கள் தேர்தல் கடமைகளுக்காக ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் 13,000 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடத்தப்படவுள்ளதாக அதன் ஆணையாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார். (அ)

# கான்ஸ்டபிள் கொலை; 3 சந்தேகநபர்கள் கைது!

கொழும்பு, ஒக. 20

தங்காலை கதுருபொகுன பிரதேசத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை தடியால் தாக்கி கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று சந்தேகநபர்கள் தங்காலைப் பிரிவு குற்றப்புலனாய்வு பிரிவின் அதிகாரிகள் குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளனர். கண்டி பிரதேசத்தில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டதாகவும் அவர் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தங்காலை கதுருபொகுண பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய சந்தேக நபரிடம் இருந்து ரி-56 தோட்டாக்களும் நாட்டுத் துப்பாக்கி ஒன்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவரிடமிருந்து கிடைத்த தகவலின் அடிப்படையில், தங்காலை பகுதியில் உள்ள வெறிச்சோடிய வீடொன்றில் பதுங்கியிருந்த மற்றைய இரு சந்தேக நபர்களும் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர். (அ)

# யுக்தியவில் 673 பேர் கைது!

கொழும்பு, ஒக. 20

நாடளாவிய ரீதியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின் போது போதைப்பொருள் குற்றம் தொடர்பில் 673 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 663 ஆண்களும் 10 பெண்களும் அடங்குவர். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் 21 பேர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இருவர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 139 கிராம் 856 மில்லி கிராம் ஹெரோயின், 272 கிராம் 63 மில்லி கிராம் ஐஸ் மற்றும் 2,594 கிராம் 362 மில்லி கிராம் கஞ்சா மற்றும் 3,356 கஞ்சா செடிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்த்த...

திங்கட்கிழமை பேராயர் மல்கம் ரஞ்சித் உள்ளிட்ட கத்தோலிக்க ஆயர்களை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றார்.

இந்தச் சந்திப்பின்போது, உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் உள்ளவர்கள் குறித்த விசாரணைக்கான சுயாதீன நீதி ஆணைக்குழுவை அமைக்க வேண்டியதன் அவசியம் தொடர்பில் பேராயர் மல்கம் ரஞ்சித் வலியுறுத்தினார்.

அவரின் வலியுறுத்தலை ஏற்ற நாமல் ராஜபக்ஷ தான் வெற்றி பெற்றதும் சுயாதீன நீதி ஆணைக்குழுவை அமைப்பதற்கு இணக்கம் தெரிவித்தார் என்று கூறப்பட்டது. (அ)

## கொக்குத்...

மூடப்பட்டமை, காணாமல் போனோர் பணிமனை (ஓ. எம். பி.) அதிகாரிகள் தமது சங்கத்தினரை அச்சுறுத்தும் வகையில் செயல்பட் டமை என்பவற்றை கண்டித்தே இந்தப் போராட்டம் நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாயில் கடந்த 2023 ஜூன் 29ஆம் திகதி தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தண்ணீர் குழாய் அமைப்பதற்காக கிடங்கு வெட்டியபோது மனித எலும்புக்கூடுகள் வெளிப்பட்டன. இதைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி முன்னிலையில் புதைகுழி தோண்டப்பட்டது. இதன்போது, 52 எலும்புக்கூடுகள், இலக்கத் தகடுகள், சயனைற் குப்பி தோட்டாக்கள் எனப் பல பொருட்கள் மீட்கப்பட்டன. இந்த நிலையில், கடந்த ஜூலை 16ஆம் திகதி நீதிமன்றின் உத்தரவின்படி புதைகுழி மூடப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஹரீன்...

ஹரீன் பெர்னாண்டோ விளை யாட்டு, காணி மற்றும் சுற்றுலா விவகாரங்களுக்கான ஆலோசகராகவும் மனுஷ நாணயக்கார தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முன்னர் இருவரும் இதே துறைகளின் அமைச்சு பதவிகளை வகித்து வந்தனர். ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து ஜனாதிபதி ரணில் தரப்புக்கு மாறிய இவர்களை ஒழுக்காற்று நடவடிக்கை மூலம் கட்சி நீக்கியது. இது தொடர்பான வழக்கில் உயர்நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் இருவரும் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை அண்மையில் இழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புலிகள்...

போட்டியிடுகிறார். சுயேச்சையாக போட்டியிடும் அவர் தனது முதல் பிரசார கூட்டத்தை கம்பஹாவில் நேற்று முன்தினம் நடத்தினார்.

இந்தப் பிரசாரக் கூட்டத்துக்கே விடுதலைப் புலிகள் தன்மீது தாக்குதல் நடத்தியபோது தான் பயணித்திருந்த காரை அவர் கொண்டுவந்திருந்தார்.

2006 ஏப்ரல் 25ஆம் திகதி அப்போதைய இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகா மீது கொழும்பில் கரும்புலி தாக்குதலை நடத்தியிருந்தனர். இந்தத் தாக்குதலில் அவரின் மெய்ப் பாதுகாவலர்கள் 9 பேர் உயிரிழந்தனர். சரத் பொன்சேகாவும் படுகாயமடைந்தார். இதனால், சுமார் 3 மாதங்கள் அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற நேர்ந்தது.

இந்த சம்பவத்தை நினைவுபடுத்தி வாக்குகளை ஈர்க்கும் நோக்கிலேயே அவர் இந்தக் காரை பிரசாரக் கூட்டத்துக்கு கொண்டு வந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. (ஐ)

## ரணிலுக்கு...

அடிப்படையில் தான் ஆதரவு வழங்குகிறார் என்றும் அவர் கூறியுள்ளார்.

மல்வத்து, அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களை சந்தித்து ஆசீர்வாதம் பெற்ற பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், இரண்டு வருடங்களாக மிகவும் சிரமப்பட்டு முன்னுக்கு வந்த நாடு, தற்போது சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறது. இந்த வெற்றியை மேலும் பாதுகாப்பதற்கும் முன்னெடுப்பதற்கும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுகின்றோம்.

இப்போதே, உள்ளூராட்சி முதல் பாராளுமன்றம் வரை அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் கைகோத்து வருகின்றனர். இதனால், அடுத்த தேர்தலில் வேட்புமனு கிடைக்காமல் போய் விடுமோ என்று யாரும் பயப்பட வேண்டாம்.

அவர்களுக்கு எந்த அச்சுறுத்தலும் ஏற்பட அனுமதிக்க மாட்டோம். புதிய அரசியல் சக்தியை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை நாங்கள் புரிந்து கொண்டுள்ளோம். அதற்காக தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள பேச்சுகளுக்கு எனது முழு ஆதரவையும் ஆசிகளையும் வழங்குகிறேன்" என்றும் சொன்னார்.

# எனக்கும் மக்களுக்குமே கொடுக்கல் வாங்கல்கள்!

## நாமல் எம். பி. சொல்கிறார்

கொழும்பு, ஓக. 20

எனது கொடுக்கல் வாங்கல்கள் மக்களுடன் உள்ளன. எனது கொள்கைகளும் மக்கள் சார்ந்தனவாகவே உள்ளன என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை - திஸ்ஸமஹாராமை விகாரையில் வழிபட்ட பின்னர் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "எனது கொடுக்கல் வாங்கல்கள் மக்களுடன் உள்ளன. எனது கொள்கைகளும் மக்கள் சார்ந்தனவாகவே உள்ளன. மக்களுக்கு சேவை செய்வதே எமது நோக்கமாகும்.

அரசியல்வாதிகளின் முடிவுகளைவிட மக்களின் தீர்மானமே முக்கியமானது. அவ்வாறு இல்லாமல், கட்சி தாவும் அரசியல்வாதிகளுக்கு சேவை செய்வது எமது நோக்கமல்ல. நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து, மீள்வதற்கான வேலைத்திட்டங்கள் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளியிடப்படும் - என்றார். (ஐ)

# 18 நாட்களில் மட்டும் 2,373 டெங்கு நோயாளர்!

கொழும்பு, ஓக. 20

நாட்டில் கடந்த 18 நாட்களில் மட்டும் 2 ஆயிரத்து 373 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 35 ஆயிரத்து 118 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலிருந்து பதிவாகியுள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 359 ஆகும்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 16 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன என்றும் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

## அதிகாரத்தை...

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸநாயக்க.

நேற்று ஜே. வி. பியின் தலைமை பணிமனையில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அநுர குமார திஸநாயக்க கூறிய முக்கிய விடயங்கள் வருமாறு,

தற்போதைய அரசியல் மிகவும் தீவிரமான பாசறைகளாக மாறியிருக்கின்றன. எங்களின் எதிர்த் தரப்பு பாசறைகளில் பாராளுமன்றத்தில் நீண்டகாலமாக அமைச்சு பதவிகளை வகித்த - அரசாங்கங்களை அமைத்தவர்களே இருக்கிறார்கள். அவர்களின் தேர்தல் இயக்கம் சிறப்புரிமைகளை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வதாகும். அதாவது இந்த நாட்டை அதலபாதாளத்தில் தள்ளிவிட்ட மோசடிகள், ஊழல்கள் நிறைந்த கலாசாரத்தை ஏற்படுத்திய குழுக்கள் பகிர்ந்து கொள்வதிலான மல்லுக்கட்டலில் ஈடுபட்டுள்ளார்கள். ரணில் விக்கிரமசிங்க ஒரு பகுதியை அபகரித்துக் கொள்ள முயற்சி செய்கிறார். நாமல் ராஜபக்ஷ ஒரு பகுதியை வைத்துக்கொள்ள முயற்சி செய்கிறார். சஜித் பிரேமதாஸ ஒன்று சேர்ந்த குப்பை மேடுகளை சேர்த்துக் கொள்ள முயற்சி செய்கிறார். இதுதான் அவர்களின் தேர்தல் இயக்கம்.

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் இயக்கத்துக்கு நாங்கள் நீண்ட காலமாக தயாராகி வந்தோம். அதற்காக நாங்கள் பல்வேறு துறைகளை சார்ந்த அமைப்புகளுடன் செயலாற்றி வந்தோம். சட்டத்தரணிகள் குழுக்கள், பொறியியலாளர்கள், கலைஞர்கள், தொழில்வாண்மையாளர்கள் இளைப்பாறிய முப்படை கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள், அதைபோலவே ஏனைய இளைப்பாறியவர்கள், வலது குறைந்தோர், கமக்காரர்கள், மீனவர்கள், இவர்கள் அத்தனைபேரையும் நாங்கள் திட்டமிட்ட அடிப்படையில் அணிதிரட்டி வருகிறோம். அதனால் மக்கள் பலமே எங்களின் சக்தியாக மாறியிருக்கிறது.

மேலும், தேசிய மக்கள் சக்திக்கு கோட்டாபயவோ - மகிந்த ராஜபக்ஷவோ அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு அழைப்பு விடுக்கமாட்டார்கள் - எங்களுக்கு அழைப்பு விடுக்கவுமில்லை. அதற்காக நாங்கள் ஆச்சரியப்படப் போவதுமில்லை. நீங்கள் நினைக்கிறீர்களா ராஜபக்ஷக்கள் ஒரு தாம்பாளத்தில் வைத்து எங்களுக்கு இதை ஒப்படைப்பார்கள் என்று. அப்படி ஒப்படைக்க மாட்டார்கள்.

மே 12 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபயவுக்கு ஒரு கடிதத்தை எழுதினோம். இந்த நெருக்கடியை தீர்த்து வைக்க தேசிய மக்கள் சக்தி தயார். எங்களுக்கு அதிகாரத்தைத் தாருங்கள் என்று அதில் கூறியிருந்தோம். குறைந்தபட்சம் அந்தக் கடிதம் கிடைத்தது என்றுகூட எங்களுக்கு பதில் கிடைக்கவில்லை.

அடுத்ததாக பாராளுமன்றத்தில் நான் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் ஜனாதிபதி பதவிக்காகப் போட்டியிட்டேன். எங்களுக்கு வாக்களித்திருக்கலாமே. அன்று பாராளுமன்றத்தில் நாங்கள் மூன்று பேர் மாத்திரமே இருந்தோம். எங்களுக்கு சார்பாக பாராளுமன்றத்தில் எவருமே வாக்களிக்கவில்லை. அதற்கான காரணம் என்ன? அவர்கள் ஒருபோதுமே எங்களுக்கு அப்படி அதிகாரத்தை கொடுக்கமாட்டார்கள். ஏன்? அவர்களுக்கு தெரியும் தேசிய மக்கள் சக்திக்கு அதிகாரத்தை பெற்றுக் கொடுப்பதென்பது ஊழலுக்கும் மோசடிக்குமான முற்றுப்புள்ளியென. அவர்களுக்கு தண்டனை வழங்குவதை நாங்கள் பிரதான காரணமாக கொண் டிருக்கிறோமென்று. எனவே ரணில் விக்கிரமசிங்கவும் அவருடைய கையாட் களும் தொடர்ச்சியாக நாங்கள் தப்பி யோடினோமென கூறிவருகிறார்கள். ஆனால், நாங்கள் அப்படி தப்பியோடி யவர்களல்ல - என்றார்.

முன்னதாக அநுராபுரத்தில் கடந்த சனிக்கிழமை நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி ரணில் "ஆட்சியை பொறுப்பேற்குமாறு கோட்டாபய ராஜபக்ஷ கோரியபோது அநுரவும் சஜித்தும் தப்பியோடி ஒளிந்தனர்", என்று கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கையரும்...

இருவரும் பயணித்திருந்தனர். இவர் கள் விடுமுறையை கழிப்பதற்காக சிசிலி தீவுக்கு பயணித்திருந்தனர் என்று தெரிய வருகின்றது.

படகு மூழ்கியதை அடுத்து, கடலோர காவல்படை மற்றும் தீயணைப்பு வீரர்கள் ஒரு வயது குழந்தை உட்பட 15 பேரை மீட்ட னர்.

மீட்கப்பட்ட குழந்தையும் தாயும் பலேர்மோவின் குழந்தைகள் மருத்துவமனை யில் சேர்க்கபட்டனர். இருவரும் நலமுடன் இருக்கின்றனர் எனவும் தாய்க்கு சிறு காயங் கள் மட்டுமே ஏற்பட்டன எனவும் தெரிவிக்கப்பட்டது.

## ஜனாதிபதி...

ஜனாதிபதி ரணிலுக்கு ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டமை தேர்தல் சட்டத்தை மீறிய செயல், பொது நிதி முறையற்று பயன்படுத்தப்படுகிறது என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"ஜனாதிபதியின் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்ட இருவரும் ஜனாதிபதியின் தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். ஒரு வேட்பாளரை ஊக்குவிக்கும் தந்திரோபாயமான இந்த நடவடிக்கை தேர்தல் சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்டது."

மேலும், "இருவருக்குமான வாகனங்கள் உட்பட கொடுப்பனவுகள் பொது நிதியை தவறாக பயன்படுத்தும் செயலாகும்", என்றார். (ஐ)

## நாமலுக்காக...

ராஜபக்ஷ.

தேர்தல் என்பது சவால்மிக்கது. அனைத்து தரப்பினரும் வெற்றி பெறவே முயற்சிப்பார்கள். ஆகவே, இந்தத் தேர்தல் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்கு சவாலானது. எம்மை விட்டு விலகிச் சென்றவர்கள் பற்றி பேசி இனி பயனில்லை. செல்பவர்களை பலவந்தமாக தக்கவைத்துக் கொள்ள முடியாது.

ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் வெற்றிக்காக நாடு முழுவதும் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுவேன். எம் மீதான மக்களின் நம்பிக்கை இன்றும் உறுதியாக உள்ளது. நிச்சயம் நாங்கள் வெற்றி பெறுவோம்.

தேர்தல் காலத்தில் எம்மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் அனைத்தும் தேர்தல் கால பிரசாரமே. சேறு பூசுவதை விடுத்து கொள்கைகயை முன்னிலைப்படுத்தி செயல்படுமாறு அரசியல் தரப்பினர்களிடம் கேட்டுக் கொள்கிறோம் - என்றார்.

இதேசமயம், சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் முதல் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நாளை புதன்கிழமை அநுராதபுரம் நகரில் நடைபெறவுள்ளது. இதனை தொடர்ந்து நாடளாவிய ரீதியில் பரப்புரை கூட்டங்களை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## வேலை இல்லாப் பிரச்னைக்கு எனது ஆட்சியில் நிரந்தர தீர்வு!

### சஜித் பிரேமதாஸ அறிவிப்பு



கொழும்பு, ஓக. 20

தனது ஆட்சியில் வேலை இல்லா பிரச்னைக்கு நிரந் தரத் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டியில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே சஜித் பிரேமதாச இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

எமது ஆட்சியில் பல மாற்றங்களை ஏற்படுத்தவுள்ளோம். குறிப்பாக ஜனாதிபதி செயலகத்தை ஒரே இடத்தில் இயங்கும் நிலையமாக மாற்றவுள்ளோம்.

நாட்டில் முதலீடு செய்ய வரும் முதலீட்டாளர்களுக்கு விரைவான அங்கீகாரம் வழங்கவும், புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்கவும் பல தீர்மானங்களை ஏற்கனவே எடுத்துள்ளோம். மேலும் நாட்டிலுள்ள ஆயிரக் கணக்கானோருக்கு வேலைவாய்ப்பை பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டத்தையும் அமுல்படுத்தவுள்ளோம்.

இளைஞர் சமுதாயத்தினரின் வேலைவாய்ப்புப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

அத்துடன், வீடு கட்டும் கிராமங்களின் எழுச்சி என்ற புதிய திட்டத்தை இந்த நாட்டில் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளோம் - என்றார். (அ)

## அத்தியாவசியப் பொருட்களுக்கான வரியை நீக்குவார் சஜித் பிரேமதாஸ!

### லக்ஷ்மன் கிரியெல்ல உறுதி



கொழும்பு, ஓக. 20

**“எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாச வெற்றி பெற்றால் அத்தியாவசிய பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரி நீக்கப்படும்” என எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.**

நாவலப்பிட்டியில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி தேர்தல் முடிவு என்னவாக இருக்கும் என்பது இன்று மிகவும் தெளிவாக தெரிகின்றது. ஐக்கிய மக்கள் சக்தியை தவிர இன்று அனைத்து கட்சிகளும் பிளவடைந்துள்ளன.

ஐக்கிய தேசியக்கட்சி இன்று இல்லாமல் போயுள்ளது. மொட்டுக்கட்சி 4 ஆக பிளவடைந்துள்ளது. சுதந்திரக்கட்சி 4 ஆக பிளவடைந்துள்ளது. இடதுசாரிகளான தேசிய மக்கள் சக்தி போராட்டகள குழுவினர் போன்றவர்களும் இரண்டாக பிரிந்துள்ளனர்.

இன்று இந்த நாட்டில் இன மத வேறுபாடின்றி அனைவரும் ஐக்கிய மக்கள் கூட்டணியை வெற்றிபெற செய்வதற்கு ஒன்றிணைந்துள்ளனர்.

தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் வெற்றியானது சூரிய உதயமும் சந்திர அஸ்தமனமும் போன்ற நிலையானதாகும்.

நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மூன்று வேளை உணவை உட்கொள்வதற்கு சிரமப்படுகின்றனர். நாட்டை வங்குரோத்து நிலைக்கு இட்டுச் சென்றவர்கள் இன்று பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் பேசுகின்றனர். நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதற்கு மக்கள் மீதே சுமைகளை அதிகரித்தனர்.

பொருட்களின் விலையை அதிகரித்தனர். வரிக்கொள்கையினை அதிகரித்தனர். எனவே தற்போதைய அரசாங்கத்தினர் மக்களின் வரிப் பணத்தின் ஊடாகவே அரசாங்கத்தை வழி நடத்திச் செல்கின்றனர்.

நாம் இந்த இடத்தில் ஒரு வாக்குறுதியை வழங்குகின்றோம். அதாவது ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஆட்சியில் மிகவும் குறுகிய காலத்திற்குள் அத்தியாவசிய பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரி நீக்கப்படும்.

மக்களுக்கு நிவாரண விலையில் பொருட்களை கொள்வனவு செய்யக் கூடியவாறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படும் - என்றார். (அ)

## 20 மோட்டார் சைக்கிள்கள் பொலிஸாரினால் பறிமுதல்

கொழும்பு, ஓக. 20

குருநாகல் - தம்புள்ளை வீதியில் அதிக இரைச்சலுடன் பயணித்ததாக கூறப்படும் 20 மோட்டார் சைக்கிள்கள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்த மோட்டார் சைக்கிள்களில் பொருத்தப்பட்டுள்ள இலக்கத்தகடுகள் போலியானவை என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த மோட்டார் சைக்கிள்களின் மொத்த பெறுமதி சுமார் 4 கோடி ரூபாவிற்கும் அதிகம் என பொலிஸார் தெரிவித்தனர்.

பூகொடையிலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள்களே இவ்வாறு பறி முதல் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பில் இந்த மோட்டார் சைக்கிள்களின் உரிமையாளர்கள் தெரிவிக்கையில் -

சேருவாவில பிரதேசத்தில் உள்ள சுமார் 60 மாணவர்களுக்கு பாடசாலை சீருடை மற்றும் புத்தகப் பைகள் உள்ளிட்ட பல்வேறு கற்றல் உபகரணங்களை வழங்குவதற்காக நாங்கள் சென்று கொண்டிருந்தோம். எங்களிடமிருந்த கற்றல் உபகரணங்களையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

இதனால், நாங்கள் மாணவர்களுக்கு செய்யவிருந்த சேவையையும் இடைநிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது - என்றனர். (அ)

## ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை 631 முறைப்பாடுகள்!

கொழும்பு, ஓக. 20

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை (ஜூலை மாதம் 31 ஆம் திகதி முதல் ஒகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி வரை) 631 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 346 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 261 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் ஒரு முறைப்பாடும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 23 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. (அ)

## இலங்கை வரலாற்றில் அதிகூடிய வாக்குகளைப் பெறுவார் ரணில்!

### ராஜித சேனாரத்ன நம்பிக்கை

கொழும்பு, ஓக. 20

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி இரவு ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின்படி ரணில் விக்கிரமசிங்க இலங்கை வரலாற்றில் அதிக வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவார் என பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 2022ஆம் ஆண்டில் நாடு வீழ்ந்தது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஓடிவிட்டார். பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஓடிவிட்டார். நிதி அமைச்சர் தப்பியோடினார். யாரும் இதனைப் பொறுப்பேற்க முன்வரவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அவர் நிதி அமைச்சின் செயலாளர், மத்திய வங்கி ஆளுநர் ஆகியோரை அழைத்துப் பேச்சு நடத்தினார்.

அதன்போது இதில் தலையிடவேண்டாம் என்று சஜித் பிரேமதாஸவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. இதனை ஒரு அதிசக்தி வாய்ந்த நபரினால் மட்டுமே மீட்டெடுக்க முடியும் என்று ஹர்ஷ டி சில்வா கூறினார்.

ரணில் விக்கிரமசிங்க இதனை மீட்டெடுத்தார். முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. பொறுப்பேற்க முடியாது என்று அவர்கள் இருவரும் கூறிவிட்டனர்.

எரிபொருள், காஸ் உள்ளிட்ட அனைத்து வரிசைகளிலும் நீங்கள் காத்திருந்த அனுபவம் உங்களுக்கு இருக்கும். இதனைச் சரி செய்ய யாரும் முன்வரவில்லை. ஆனால், பாராளுமன்றத்தில் தனி மனிதராக ஒருவர் இருந்தார். அதுதான் ரணில் விக்கிரமசிங்க. அந்த நபர் பதவியை ஏற்று வெளியே வரும்போது ஊடகங்கள் கேள்விகளை எழுப்பின.

மிகவும் சிரமமான பணி, ஆனால் இதனை நான் செய்து முடிப்பேன் என்று ரணில் விக்கிரமசிங்க கூறினார். அவ்வாறே செய்து காட்டினார்.

அவர் இன்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றார். அன்று பொருட்களின் விலை விண்ணைத் தொட்டது. அது தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. திறைசேரி காலியாகியிருந்தது. ரணில் விக்கிரமசிங்கவிடம் வெற்றுப் பாத்திரமே கையளிக்கப்பட்டது. தற்போது பொருளாதாரம் வளர ஆரம்பித்துள்ளது.

ரணில் விக்கிரம்சிங்கவிடம் நாட்டை ஒப்படையுங்கள். 2025ஆம் ஆண்டு இந்த நிலைமையை மேலும் மேம்படுத்த வேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து இதுவரை 14 பேர் வந்துள்ளனர். இன்னும் முடியவில்லை. இன்னும் வருகின்றார்கள்-என்றார். (அ)

## விடுதியில் தங்கியிருந்த மூன்று யுவதிகள் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 20

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் சந்தேகத்துக்கு இடமான முறையில் தங்கியிருந்த மூன்று யுவதிகள் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையில், மாவட்ட செயலகத்துக்கு சற்று தொலைவில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் சந்தேகத்துக்கு இடமான முறையில் ஆள் நடமாட்டம் உள்ளதாக யாழ்ப்பாண பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த விடுதிக்கு பொலிஸார் சென்று சோதனையிட்டனர்.

அதன்போது, விடுதியில் எவ்வித பதிவுகளும் இன்றி தங்கியிருந்ததுடன், தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்த தவறிய மூன்று யுவதிகளை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட யுவதிகளை விசாரணைகளின் பின்னர் யாழ். நீதவான் முன்னிலையில் முற்படுத்திய வேளை, அவர்களை எதிர்வரும் 26ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதவான், மூவரையும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் உத்தரவிட்டார். (அ)

## எம்மிடம் வாக்கு கேட்டு வந்தால் தாக்குவோம்!

### எச்சரிக்கும் கிராம மக்கள்

கொழும்பு, ஓக. 20

மாத்தளை - நாவுல, அடவல கிராம மக்கள் 2024 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கக் கோரி தமது கிராமத்துக்கு வரும் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மீது தாக்குதல் நடத்துவோம் என எச்சரிக்கை விளம்பரங்களைக் காட்சிப்படுத்தியுள்ளனர்.

பல ஆண்டுகளாக தங்கள் கிராமத்துக்கு வருகை தந்த அரசியல்வாதிகள் அளித்த வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை எனக் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

தங்கள் கிராமத்துக்குச் செல்லும் வீதிகள், விவசாய நிலங்களில் உள்ள பிரச்னைகள், போக்குவரத்து சிரமம் போன்ற காரணங்களால், இம்முறை தேர்தலை தங்கள் கிராம மக்கள் புறக்கணிக்கவுள்ளதாகக் கூறுகின்றனர்.

வாக்குறுதிகளை நிறைவேற்றாத அரசியல்வாதிகள் தங்கள் கிராமத்திற்கு வரவேண்டாம் என்றும் அவ்வாறு வந்தால் தாங்கள் பதில் சொல்லத் தயார் என்றும் கிராம மக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org